விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 மார்ழி 2 ரபி ஆகிர் 4 இதழ் 310
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 17-12-1985

## பாதுகாப்பு அமைச்சில் பிரபாகரன் பேட்டி

[கொழும்பு]

''தமிழீழம் அமைக்க முடியும் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கை. தமிழீழம் தான் எமது முடிந்த முடிவு'' என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன், பிரிட்டிஷ் தொலைக்காட்சி நிறுவனம் ஒளிபரப்பிய 'குழப்பம் நிறைந்த சுவர்க்கபூமி' என்னும் தொலைக்காட்சிப் பேட்டியில் கூறியுள்ளார்.

மேற்படி வீடியோ விவரணப் படம் நேற்றுக் காலை பாதுகாப்பு அமைச்சில் ராஜாங்க அமைச்சின் செயலாளர் டாக்டர் விக்கிரம வீரசூரியாவினுல் நடத்தப்பட்ட செய்தியாளர்கள் மகாநாட்டில் போட்டுக் காண்பிக்கப்பட்டது.

தொலைக்காட்சிப் பேட்டியில் திரு. வே. பிரபாகரன் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''இழந்த எமது பாரம்பரிய பூமியை மீட்பதற்காகவே நாம் போராடுகின்றோம். எமது தாயகம் மீட்கப்படவேண்டும். நம்மை நாமே ஆளுதல் வேண்டும். நாம் ஒரு தனி இனம் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

''போர்நிறுத்தம் முற்றுகக் கடைப்பிடிக்கப்படவில்லை. நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் ஆயுதப் படையினரால் படுகொலை செய்யப்படுகின்ற

(-5ம் பக்கம் பார்க்க)

••• இலங்கை இனப்பிரச்னை

# அவசர அழைப்பின்மீது டிக்ஸிற் புதுடில்லி விரைவு!

## ஜே. ஆருடன் 40 நிமிடம் ஆலோசனை நடத்தினுர்

(கொழும்பு)

**இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக ஆலோசனை நடத்தும்பொருட்டு இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என். டிக்ஸிற் இந்திய அரசாங்கத்தின் அழைப்பின்மீது நேற்றுக் காலை புதுடில்லி விரைந்துள்ளார்.**

**இந்தியா புறப்படுமுன்னர், ஜனுதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனுவுடன் சுமார் நாற்பது நிமிடங்கள் முக்கிய பேச்சுக்கள் நடத்திய உயர் ஸ்தானிகர்; இம்மாதம் இருபத்து ஆறும் திகதிவரை புதுடில்லியில் தங்கியிருப்பார்.**

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இந்திய அரசாங்கத்தின் குறிப்பொன்றை ஜனுதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனுவிடம் நேற்று முன்தினம் கையளித்த திரு. ஜே. என். டிக்ஸிற் நாற்பது நிமிடங்கள்வரை பேச்சுக்கள் நடத்தினுர்.

இதுகுறித்து திரு. டிக்ஸிற் சுருக்கமாக கருத்து, தெரிவிக்கையில், 'சிக்கலான நிலைமை குறித்து ஆலோசனை நடத்தினேம்'' என்று மட்டும் குறிப்பிட்டார்.

நேற்றுக் காலை திரு. டிக்ஸிற் புதுடில்லி பயணமானுர். இன்று அவர் முதலில் பாரத வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியை சந்தித்து ஜனுதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனுவுடன் தாம் நேற்று முன்தினம் நடத்திய ஆலோசனை குறித்தும் இலங்கை நிலைமை பற்றியும்விளக்குவார்.

### மோகனரங்கம் குற்றச்சாட்டு

இதற்கிடையே, பாகிஸ்தன் அதிடர் இலங்கையில் விடுத்திருந்த அறிக்கை குறித்து அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் ஐயம் தெரிவித்துள்ளது.

''இலங்கையிலுள்ள இந்திய வம்ச வழியினரை சமாளிப்பதற்காக, இலங்கை அரசுக்கு உதவும் பொருட்டு அங்கு பாகிஸ்தான் துருப்புக்கள் அழைக்கப்படவுள்ளதாக திரு. ஆர். மோகனரங்கம் (அ.இ. அ. தி. மு. க.) கவலை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அதிபரால் கொழும்பில் வெளியிடப்பட்ட அறிக்கை விரும்பத்தாத சூழ்நிலையொன்றை தோற்றுவித்திருப்பதாகவும், இதனை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் நேற்று ராஜ்ய

(5-ம் பக்கம் பார்க்க)

## தாம்போதி வழிதிறந்தது
## ஒத்துழைப்புக்கு அரச அதிபர் நன்றி

[யாழ்ப்பாணம்]

''தாம்போதி பொதுசனங்களுக்குத் திறந்து விடப்பட்டுள்ளதாக நேற்று பூநகரி தாம்போதியை, சம்பிரதாய முறைப்படி மங்களவிளக்கேற்றி திறந்து வைத்த யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் கூறினுர்.

இத்திறப்பு விழா வைபவத்தில் யாழ். மாவட்டசபையின் முன்னுள் தலைவர் திரு க. நடராசாவும் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி வைத்தார்.

மற்றும் யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் திரு. இராமநாதன், உதவி

(8-ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுமுன் 30 பேர் சாட்சியம்

(திருகோணமலை)

யுத்தநிறுத்தக் கண்காணிப் குழு திருகோணமலை, மூதூருக்கு விஜயம்செய்து அங்குள்ள பிரஜை ள் குழுக்களும், பாதுகாப்புப்படை அதிகாரிகளும் தெரிவித்திருந்த முறைப்பாடு குறித்து நேற்றுவரை விசாரணை செய்தது.

பிரஜைகள் குழுக்களின் பிரதிநிதிகள் தெரிவித்த முறைப்பாடுகளைக் கண்காணிப்புக் குழுவினர் கேட்டறிந்தனர்.

திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலுமிருந்து சுமார் முப்பதுபேர் சாட்சியமளித்தனர். திருகோணமலை தேசிய ஒற்றுமை பிரஜைகள்

(5-ம்பக்கம் பார்க்க)

## துப்பாக்கி பிரயோகம்: நால்வர் பலி!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோட்டைக்கல்லாறிலும், வந்தாறுமூலையிலும் ஆயுதப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் நால்வர் பலியானுர்கள்.

நேற்று முன்தினம் இரவு இச் சம்பவங்கள் இடம்பெற்றன.

(5-ம் பக்கம் பார்க்க)

## கணேசபுரம் சோகமயம்!
## ஒரே வீட்டில் நால்வர் பலி!

(நமது கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி 6ம் வாய்க்காலில் இடம்பெற்ற இராணுவ அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து ஒரே வீட்டில் நான்காவது மரணம் இடம்பெற்றுள்ளது!

இராணுவ துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான கணேசபுரம் வாசியான க. மனேகரராசாவின் வீட்டில் நான்காவது மரணச் சம்பவம் இடம்பெற்று கணேசபுரம் பகுதியைச் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது!

இவரது மனைவியான செல்வராணி, கணவன் பலியான அதிர்ச்சி தாங்காது மாரடைப்பால் மரணமானுர்! (செய்தி 6ம் பக்கம்) இம்மரணச் சடங்கில் கலந்துகொண்டபோது சுமார் 8 வயதுச் சிறுவன் மரண வீட்டில் மின்சாரத் துக் பலியனுன்!

ஏற்கனவே பிரஸ்தாப வீட்டில் வசித்துவந்த இராசரெத்தினம் என்பவர் வயலில் வேலைசெய்யும்போது சூடுபட்டு மரணமானது தெரிந்ததே.

## 'குழப்பம் நிறைந்த சுவர்க்க பூமி'
# வீடியோ படத் தகவல் முற்றிலும் பிழையானது

### புள்ளி விபரங்களுடன் விக்கிரமவீரசூரியா விளக்கம்

(இ. கந்தசாமி)

''பிரிட்டிஷ் தொலைக்காட்சி நிறுவனமென்றினுல் கடந்த மாதம் ஐந்தாம் திகதி ஒளிபரப்பப்பட்ட 'குழப்பம் நிறைந்த சுவர்க்கபூமி' என்னும் திருகோணமலை தொடர்பான வீடியோ படத்தை எடுத்த செய்தியாளர்களுக்கு முதலில் அனுமதி மறுக்கப்பட்டுருந்ததாக தெரிவிக்கப்பட்டது. ஆனுல் எம்மிடம் எவ்வித அனுமதியும் கோரப்படவில்லை. இது தொடர்பாக இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகருக்கும் எதுவும்தெரியாது. இது முற்றுமுழுதான தவறுன பெய்ப்பிரச்சாரமாகும் என்று ராஜாங்க அமைச்சின் மேலதிகச்செயலாளர் டாக்டர் விக்கிரமவீரசூரிய நேற்று பாதுகாப்பு அமைச்சில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் டாக்டர் விக்கிரமவீரசூரியா மேலும் தெரிவித்துள்ள விபரங்கள்வருமாறு:

''இன்றுவரை நாட்டிலுள்ள அகதிகளின் மொத்தத்தொகை 48, 415. இதில்சிங்களஅகதிகள் 22-444. தமிழ்அகதிகள் 21,147 முஸ்லிம்அகதிகள் 4,824ஆகும்.

திருகோணமலை மாவட்டத்தின் அகதிகளின் மொத்தத் தொகை 20611. இதில் சிங்களவர்கள் 7142, தமிழர் 8645, முஸ்லிம்கள் 4824,

அநுராதபுர மாவட்டத்தின் அகதிகள் மொத்தத்தொகை 14,756, இவர்கள் சிங்கள மக்களே.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அகதிகளின் மொத்தத் தொகை 8517, இவர்கள்தமிழர்கள் மட்டுமே.

மன்னுர் மாவட்டத்தின் அகதிகளின் மொத்தத் தொகை 2161, இதில் சிங்களவர் 76, தமிழர்கள் 2085.

வவனியா மாவட்ட அகதிகளின் மொத்தத் தொகை 470 இவர்கள் அனைவரும் சிங்களவர்களாகும்.

முல்லைத்தீவு மாவட்ட அகதி

[5-ம் பக்கம் பார்க்க]

## ஊர்காவல்படையினர் கைது
## சிலர் தலைமறைவு

(வவனியா)

வவனியாமாவட்டத்திலுள்ள மடுகந்தை, கள்ளிக்குளம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் தமிழ்க் குடும்பங்கள் ஊர்காவல்படையினரால் பயமுறுத்தப்பட்டதுசம்பந்தமாக இடம்

(8-ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

Bairaba Farms புரொயிலர் குஞ்சுகள் 17-ந் திகதி, 24-ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 2324

விற்று தீர்ப்பதற்காக மலிவு விலையில் உள்நாட்டு, வெளிநாட்டு புடவை வகைகள் 16-12-85 முதல் 31-12-85 வரை விற்கப்படும். வியாபாரிகளும் தொடர்பு கொள்ளவும். வனஜா புடவை மாளிகை, (சுப்பர்ஸ்கபே முன்பாக) 144, மொடேர்ண் மார்க்கற், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2335

தட்டச்சு யந்திரங்கள் விற்பனைக்குண்டு. நிர்வாகி-சங்கர், J. E. C. மேல்மாடி, சாந்தி சினிமா முன்பாக, யாழ்ப்பாணம். 2124

பாவித்த அலுமாரி ரங்கூன் தேக்கு ரூ. 4250/- Show Case தேக்கு ரூ 2500/-, பெரிய இருக்கை ரூ. 1500/-, தட்டச்சு இயந்திரம் ஸ்மித் கொறஜு போட்டபிள் ரூ. 1500/-, மேசை ரூ. 1000/, சட்டில் ரூ. 1500/- விளம்பர இல: 2415 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம், 2415

### சாவகச்சேரி நகராட்சிமன்றம்

### ஆதனவரி அறிவித்தல்

1985ம் ஆண்டு 4ம் காலாண்டுக்குரிய ஆதனவரியை 31-12-85ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்பு இக்காரியாலயத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தவறின் இத்திகதிக்குப் பின்பு செலுத்தப்படும் வரியுடன் வசிப்பிட வளவுகளுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் பதினைந்து வீதமும் (15%), ஏனைய ஆதனங்களுக்கு இருபது வீதமும் (20%) கூடுதலாகச் சேர்த்து அறவிடப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஆதனவரி செலுத்தப்படாத வெற்றுக்காணிகளைச் சுவீகரிப்பதற்குச்சபையால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எனவே காணி உரிமையாளர்கள் உடனடியாகச் சபையுடன் தொடர்பு கொள்ளவும்.

1986ம் ஆண்டுக்கான ஆதன வரியை முழுமையாகச் செலுத்துவோர்களுக்கு 10% கழிவு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
10-12-85. 2344

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

## தேவை

யாழ். நகரில் பிரபல்யம் வாய்ந்த ஸ்ருடியோவிற்கு அனுபவம் வாய்ந்த [All Rounder] வேலையாட்களும் பயிலுனர்களும் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 21-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும். விளம்பர இல.2392, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2392

இறைச்சிக்கான கோழிகள் தேவை. தொடர்புகொள்ள வேண்டிய இடம் அண்ணு பாம், [செம்மா தெரு யும்மா மொஸ்க் லேன்] யாழ்ப்பாணம். கிளை: அண்ணு பாம், ஸ்ரேசன் ரோட், இணுவில். உடன் தொடர்புகொள்ளவும். [2396]

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனம் முடியாமல் அடியற்றுக் காலம் சென்ற வளலாய் கிழக்கு, அச்சுவேலியைச் சேர்ந்த பண்டாரம் துரையின் சொத்துக்கள்விடயமாக.

இறந்தவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல: T/246

பண்டாரம் துரை கைம்பெண் அம்மாப்பிள்ளை வளலாய் கிழக்கு, அச்சுவேலி.

மனுதார்.

எதிராக

1. சண்முகம் கிருஷ்ணபிள்ளை
2. பெண் சரஸ்வதி
3. ஆண்டி சின்னத்துரை
4. பெண் சின்னம்மா
5. முருகர் சின்னக்கண்டு
6. பெண் மாணிக்கம்
7. பொன்னையா அப்புத்துரை
8. பெண் சின்னத்தங்கம்
9. பண்டாரம் பழனிவேல்
10. பண்டாரம் தர்மலிங்கம்
11. பண்டாரம் புவிராசா

எல்லோரும் வளலாய், அச்சுவேலி.

எதிர்மனுதாரர்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்குமேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு மாசி மாதம் 05ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1985ம் ஆண்டு மார்கழி மாதம் 05ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

தயாரித்தவர்:
செ. பேரின்பநாயகம்,
மனுதாரின் சட்டத்தரணி.
(2359)

### கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருதனுமடம் இடவளவில் அமைந்துள்ள இராமநாதன் நுண்கலைப் பிரிவின் சைவ சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 1986-01-10ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்கள் இப்பல்கலைக்கழகத்தின் நலச்சேவைகள் கிளையிலிருந்து மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணமாக ரூபா 250/-உம், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 25/-ம் பல்கலைக்கழக நிதிக் கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்,
12-12-1985. (2367

செல்வி
எஸ். அபிமன்னசிங்கம்
சட்டத்தரணி
சித்தாவத்தை, உடுவில்

### பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

(இல. 74 அ—பிரிவுகள் 524, 532)

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்,

காலஞ்சென்ற யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, சிவப்பிரகாசம் வீதி, 131-ம் இலக்கத்தைச் சேர்ந்த கணேசபிள்ளை சரவணபவானந்தம் என்பவரின் மரணசாதனமில்லாச்சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர் கணேசபிள்ளை சரவணபவானந்தம் கைம்பெண் மங்கயற்கரசி

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல: T/3928

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு மார்கழி மாதம் 20ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

பதிவாளர்.
(2418)

### ஓய்வு பெறுகிறார்

(கரவெட்டி)

வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திரு. சி. கணேசமூர்த்தி 35 வருடஆசிரிய சேவையுடன் கடந்த மாதம் முதல் ஓய்வு பெற்றுள்ளார்.

ஆரம்பத்தில் கண்டி மாவட்டத்திலுள்ள பலபாடசாலைகளில் கணித விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் பின்னர் வல்வெட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை அதிபராக நியமிக்கப்பட்டு அங்கு பல்லாண்டுகள் அதிபராகக் கடமையாற்றினார்.

### கிரிக்கெட் போட்டி

[வவனியா]

எதிர்வரும் நத்தார் தினத்தன்று வவனியா இறம்பைக் குளத்தில் விளையாட்டுப் போட்டி இடம்பெறவுள்ளது.

இறம்பைக்குளம் யூனிவேசல் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் 20 ஓவர் கொண்ட கிரிக்கட் போட்டி நடைபெறவுள்ளது.

ஆறு கழகங்கள் இப் போட்டியில் கலந்து கொள்ளும் என மேற்படி கழகத்தின் செயலாளர் தெரிவித்தார்.

## அந்தியேஷ்டி அழைப்பு

19-11-1985 காலமான எமது குடும்பத் தலைவர்
திருவாளர்
வல்லிபுரம் சபாரத்தினம்
(இரத்தினம்) அவர்களின்
அந்தியேஷ்டிக் கிரியைகள் 18-12-1985
புதன்கிழமை இரவு
எமது இல்லத்தில் நடைபெறும்.

அவ்வமயம் தாங்கள் சமுகந்தந்து மறுநட் காலை (வியாழன்) நடைபெறும் சபிண்டிகரணத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தித்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
திருமதி ஈஸ்பரம் சபாரத்தினமும், பிள்ளைகளும்
'ரட்ணவாசா' கலட்டி வளவு, வல்வெட்டி [2417]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### கந்தையா தங்கம்மா (செவ்வந்தி)



| தோற்றம்: | மறைவு: | திதி: |
|---|---|---|
| 19-06-1939 | 17-11-1985 | 17-12-1985 |

கந்தையா தங்கம்மா [செவ்வந்தி] அவர்களின் ஆத்மா சாந்தியடைய எம்கண்ணீர் சமர்ப்டணம்.

கணவன்: தில்லையம்பலம் கந்தையா,
மகன்: கந்தையா கசேந்திரம்,
உற்றார், உறவினர்.

சில்லாலை, பண்டத்தரிப்பு. (2423)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா வல்லிபுரம்

அளவெட்டி தெற்கைச்சேர்ந்த காலஞ்சென்ற ஓய்வு பெற்ற ஓவசியர் வல்லிபுரத்தின் மனைவி திருமதி தங்கம்மா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற மூத்ததம்பி (ஓய்வுபெற்ற கட்டிடப் பரிசோதகர் கல்வி இலாகா), திருமதி இரத்தினம் பொன்னம்பலம், திருமதி நாகேஸ்வரி சுப்பிரமணியம், திருமதி சரஸ்வதி நடேசன், திரு. நடராசா (ஓய்வுபெற்ற அரசாங்க லிகிதர்), திருமதி புஸ்பவதி பொன்னம்பலம், திரு.நாகேந்திரம்(அரசாங்க லிகிதர், கச்சேரி, யாழ்ப்பாணம்), ஆகியோரின் அருமைத் தாயாரும். திரு. சி. பொன்னம்பலம், (ஓய்வுபெற்ற சித்திராசிரியர்- ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), திரு. சி. சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), திரு. எ. நடேசன் (காலம்சென்ற சிறுப்பர், இரத்தினபுரிக் கச்சேரி), திரு. தா. பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற இசை ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி), திருமதி சுகிர்தா-திருநெல்வேலி, திருமதி செல்வராணி, உயரப்புலம், ஆனைக்கோட்டை, திருமதி விமலாதேவி கந்தர்மடம் ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 16-12-85 திங்கட்கிழமை அளவெட்டி தெற்கு, முருங்கையர்புலம் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

2422 அறிவித்தவர்:- மு. வ. நடராசா

# மொறீசியஸ்கவனர்ஜெனரல் ராம்குலாம் காலமானர்

(போட்லூமி)

**மொறீசியஸின் கவனர் ஜெனரலும், முன்ளுள் பிரதமருமான திரு. திபுசாகர் ராம்குலாம் தமது 85வது வயதில் காலமானுர். இவர் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்தார் என்றும் கூறப்படுகிறது.**

திரு. ராம் குலாமை கௌரவிக்கும்வகையில் கொறீஸியஸ் அரசு அடுத்த புதன்கிழமை வரை தேசிய துக்கதினமாக அறிவித்துள்ளது. 1900ம் ஆண்டில் இவர் பிறந்தார்.

1940ம் ஆண்டில் அரசியலில் சேர்ந்த இவர், 1948ம் ஆண்டில் பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். 1965ம் ஆண்டில் மொறீஸியஸ் தொழில் கட்சித் தலைவரான அவர், 1967ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அமோக வெற்றி பெற்ற பின்னர், 1968ல் பொறீஸியஸ் நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுத்தார்.

1982ம் ஆண்டுவரை அவருடைய தொழில் கட்சிதான் ஆட்சியில் இருந்து வந்தது. 1984ம் ஆண்டு ஜனவரி மாதம் அவர் மொறிஸியஸிஸ் கவனர் ஜெனரல் ஆனுர்.

திரு. ராம்குலாம் 1976, 77ம் ஆண்டில் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் தலைவராக இருந்தார். 1973ம் ஆண்டில் ஐ. நா. மனித உரிமைகள் விருது பெற்ற இவருக்கு, 1984ம் ஆண்டில் நேரு சமாதானப் பரிசும் அளிக்கப்பட்டது. (பி)

உலகச் செய்திகள்

## மதுவுக்கு அடிமையான இளைஞர் நஞ்சுக்கு பலி!

[யாழ்ப்பாணம்]

மதுவுக்கு அடிமையான இளைஞர் வாழைப்பழத்திற்குள் நஞ்சுவைத்து விழுங்கியதால் மரணமானுர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த விநாயகமூர்த்தி ராஜகாந்தன் மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரணவிசாரணை நடத்தினுர்.

இறந்தவர் புங்குடுதீவில் திருமணம் செய்தாரென்றும், கூலிவேலை செய்துவந்த இவர் தினமும் மது அருந்துவது வழக்கமென்றும், சம்பவதினம் வீடுதிரும்பி, வாழைப் பழத்திற்குள் நஞ்சுவைத்து விழுங்கியதாகவும் பின்னர் ஆஸ்பத்திரியில் மரணமானுரென்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (க)

## கலை விழா

[கரவெட்டி]

கரவெட்டி அரசடி சிறுவர் பாலர் பாடசாலை ஆண்டுக் கலைவிழா அண்மையில் நடைபெற்றது.

இவ்வைபவத்திற்கு பாலர் பாடசாலை இயக்குனர் திருமதி மனேரஞ்சிதம் பூரணம் பிள்ளை தலைமை தாங்குகினுர். கடந்த மூன்று ஆண்டுக்காலமாக இப்பாடசாலையில் கலை விழா தொடர்ந்து நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. [தெ]

## பங்களாதேஷில் அடுத்தமாதம் அரசியல் நடவடிக்கைகளுக்கு அனுமதி

### ஜனதிபதி எர்ஷாத் அறிவிப்பு

(டாக்கா)

'பங்களாதேஷில் அடுத்த மாதம் 1-ம் திகதி தொடக்கம் பகிரங்க அரசியல் நடவடிக்கைகள் அனுமதிக்கப்படும்' என்று பங்களாதேஷின் அதிபர் லெப்டினன்ட் ஜெனரல் எர்ஷாத் அந்நாட்டு மக்களுக்கு வானெலி, தொலைக்காட்சி மூலம் அறிவித்துள்ளார்.

தேசிய தேர்தலை ஏற்படுத்துவதற்கு ஏற்ற சுமுகமான ஒரு சூழ்நிலையை உருவாக்கும் அரசியல் நடைமுறை தொடங்கிவிட்டது என்றும் அவர் கூறினுர்.

கூடிய விரைவில் ஜனநாயகத்தையும் அரசியல் சாசனப்படி ஆட்சியையும் ஏற்படுத்துவதற்குத் தாமும், தமது அரசும் உறுதிபூண்டிருப்பதாகவும் ஜனுப் எர்ஷாத் அறுவித்தார். [பி]

## இடம் மாறுகிறது

[வவனியா]

வவனியா பொலிஸ் நிலையத்திற்கு முன்னுல் உள்ள கட்டிட திணைக்கள பொறியலாளர் அலுவலகம் இடம் மாறவுள்ளது:

அடுத்த ஆண்டு முதல் வாரத்தில் இந்த அலுவலக இடமாற்றம் நடைபெறும் எனத் தெரியவருகின்றது.

## நிறைவு

[யாழ்ப்பாணம்]

வண்ணர்பண்ணை கட்டி வீரக்கத்தி விநாயகர் ஆலயப் பிள்ளையார் கதைபடிப்பு இன்றுடன் நிறைவடைகிறது.

கடந்த 21 தினங்களாக இக்கதை படிப்பு இடம்பெற்றது. இக்கதை படிப்பு நிறைவையொட்டி விசேட அபிஷேக ஆராதனைகளும் உற்சவமும் நடைபெறவுள்ளன.

## ஈரான் மறுபரிசீலனை

(தெஹிரான்)

ஈரான் மனித உரிமைகளை மீறியுள்ளது என்ற ஐ நா வின் தீர்மானத்துக்கு ஆதரவாய் வாக்களித்த நாடுகளுடனி அரசியல், பொருளாதார உறவுகள் குறித்து மறுபரிசீலனை செய்யப்போவதாக ஈரானிய வெளியுறவு அமைச்சர் ஜனுப் அலி அக்பர் டிலாயத்தி தெரிவித்துள்ளார். [பி]

## "கூட்டணியின் யோசனைகளை இலங்கை ஏற்குமாறுபிரிட்டன் வலியுறுத்த வேண்டும்!

### அமிர் கோரிக்கை

(லண்டன்)

இலங்கை இனப்பிரச்னை தீர்வுக்கு கூட்டணி சமர்ப்பித்துள்ள திட்டத்தை இலங்கை அரசை ஏற்றுக்கொள்ளுமாறு பிரிட்டிஷ் வற்புறுத்த வேண்டும் என்று கூட்டணி செயலாளர் நயகம் திரு அ. அமிர்தலிங்கம், பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சு உயர் அதிகாரிகளை சந்தித்து கேட்டுக் கொண்டார்.

இலங்கையில் தமிழர் மீது நடக்கும் விமான தாக்குதலில் அந்த விமானங்களை பிரிட்டிஷ் எஸ்.எ.எஸ் கூலிப்படைகளே ஓட்டிச் செல்வதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்த திரு. அமிர்தலிங்கம் பலத்த ஆட்சேபத்தை தெரிவித்தார். (இ)

## மகாத்மா நல்லெண்ண சபை

[கரவெட்டி]

அல்வாய் வடக்கு மகாத்மா சனசமூக நிலையப் பகுதியில் மகாத்மா நல்லெண்ண சபை ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இச்சபை கிராமத்தில் நடைபெறும் பிரச்னைகளைத் தீர்ப்பதோடு, சமூர் நலன் கருதியும் செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சபையின் உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. கி. செல்லத்துரை, உப தலைவர்: திரு. இ. கணேசரத்தினம், செயலாளர்: திரு. இ. அருமைத்துரை, உப செயலாளர்: திரு, த. சின்னராசா, பொருளாளர் திரு. சி. முருகேசன்.

## தென்னுபிரிக்காவில்மீண்டும் கலவரம் தொடர்கிறது

(பிறிட்டோறியா)

தென் ஆபிரிக்காவில் டேர்பன் நகரில் நடந்துள்ள இன ஒதுக்கல் எதிர்ப்புப் பேரணி ஒன்றின் பின்னர் அங்கு மிகத் தீவிரமான கலகங்கள் நடந்துள்ளன.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கூக்குரல் இட்டவண்ணம் கடைகள், கட்டிடங்களுக்குள் புகுந்து கொள்ளையிடத்தொடங்கிவிட்டார்கள்.

பொலிஸார், இராணுவத்தின் உதவியோடு ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்தார்கள். இந்த நகரில் நடந்துள்ள சம்பவங்களிலேயே இதுதான் மிகவும் மோசமான சம்பவம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (பி)

## நடவடிக்கை எடுக்கப்படும்

(பூநகரி)

கிளிநொச்சி - பூநகரி பஸ் சேவையின் சீர்குலைவு குறித்து வடபிராந்திய போக்குவரத்து சபைத் தலைவரிடம் முறையிட்டதை அடுத்து உரிய நடவடிக்கை எடுப்பதாக வ. பி. போ. சபைத்தலைவர் உறுதியளித்திருப்பதாக பூநகரி பிரஜைகள் குழுத்தலைவர் தெரிவித்துள்ளார்,

## வவனியா அகதிகள் நிலைமை

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களை மூடி அகதிகளை திரும்பவும் அவர்களுடைய பழைய இடங்களுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் பற்றி வவனியா மாவட்ட பிரதம இணைப்பதிகாரி பிரிகேடியர் அசோகா ஜயவர்த்தன வவனியா மாவட்ட சகல உதவி அரச அதிபர்களுக்கும் விளக்கம் அளித்துள்ளார்.

தனது அலுவலகத்திற்கு அழைத்து இந்த அறிவிப்பினை இணைப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

## சமரச முயற்சி

[யாழ்ப்பாணம்]

நாவலர் வீதியில் உள்ள 'ஜமாஅத்த இஸ்லாம் பயிற்சி மன்றம்' சேதப்படுத்தப்பட்டதுடன் இம்மன்றத்தின் தலைவரதும்; பாடசாலை தலைமை ஆசிரியர் ஒருவரதும், இம்மன்றத்தின் உறுப்பினர் ஒருவரதும் வீடுகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ். முஸ்லிம் வட்டாரத்தில்இச்சம்பவம் பெரும்பதற்ற நிலையை உருவாக்கியுள்ளது.

இதுதொடர்பாகச் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கெபள்ளப்பட்டுள்ளன.

யாழ். மாநகரசபை முஸ்லிம் வட்டாரத்தில் முஸ்லிம் கல்லூரி வீதியில் இருக்கும் ''இஸ்லாமிய இளைஞர் ஒன்றியக் கட்டிடத்தில் இஸ்லாம் மத நூல் நிலையம் ஒன்றினை அமைக்க ஏற்பாடுகளை மேற்கொண்டபோது இருகோஷ்டியினர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து மோதலே இப்பிரச்னைக்குக் காரணமெனக் கூறப்பட்டது. (ஐ)

## இலங்கை நாடற்றவர் விவகாரம்: இலங்கைத்தூதர்கருத்துக்கு கூட்டணி மறுப்பு!

(லண்டன்)

இலங்கையில் நாடற்றவர் என்று ஒருவர் கூட இல்லை என்று இலங்கைத் தூதுவர் லண்டன் தொலைக்காட்சிப் பேட்டியில் தெரிவித்ததைக் கூட்டணி செயலாளர்நாயகம் திரு.ஏ.அமிர்தலிங்கம் மறுத்துள்ளார்.

லண்டன் தொலைக்காட்சி நிலைய அதிகாரிகளைச் சந்தித்து இலங்கையிலுள்ள நாடற்றவர்கள் நிலைமைபற்றி விளக்கினுர்.

அநுராதபுரம் தாக்குதலுக்கு புலிகளே பொறுப்பு என்று திரு. பிரபாகரன் தெரிவித்துள்ளதாக, அந்ததொலைக்காட்சி பேட்டியில் இலங்கை தூதுவர் தெரிவித்துள்ளதையும் திரு. அமிர்தலிங்கம் மறுத்துள்ளார்.

எந்தச் சந்தர்ப்பத்திலும், அநுராதபுரம் தாக்குதலுக்கு புலிகள் பொறுப்பென்று திரு. பிரபாகரன் கூறவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

லண்டன் பி. பி. ஸி தொலைக்காட்சிக்கு திரு. அ. அமிர்தலிங்கம் பேட்டியளித்த பின் இன்று நியூயோர்க் புறப்பட்டார். (இ)

## 4 பாடசாலைகளில் 6ம் வகுப்புக் கல்வி

[கரவெட்டி]

உடுப்பிட்டி வட்டாரத்தில் இதுவரை காலமும் 5ம்வகுப்பு வரை மட்டும் இயங்கிவந்த நன்கு பாடசாலைகளில் 1986 ஆம் ஆண்டு முதல் 6ம் வகுப்பு ஆரம்பிக்கப்படும்.

இங்குள்ள கொற்றுவத்தை அமெரிக்க மிசன் பாடசாலை, கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலை, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி கிழ.அரசினர் தமிழ் கலவன்பாடசாலைஆகிய பாடசாலைகளிலேயே6ம்வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளதாக உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. கே, ஈசுரபாதம் தெரிவித்தார்.

## மணிவாக்கு

மருந்திலும் பார்க்க, மருத்துவரிலும் மருந்திலும் நோயாளிக்குள்ள விசுவாசமே நோயைக் குணப்படுத்துகிறது

- அரவிந்தர்

## நமது நோக்கு

# அச்சுறுத்தலுக்கு அயல் நாடு(கள்) உதவும்?

'ஸியா; ஏன்ஐயா இந்த ஏமாற்றமளிக்கும் செய்தியைப்பத்திரிகையாளர்மகாநாட்டில் அளித்தீர்கள்' என்ற புலம்பல் எமது காதில் வீழ்கிறது.

இலங்கை, முதல் நம்பர் நண்பன் பாகிஸ்தான்ஜனாதிபதி தமிழர் பிரச்னைபற்றிய அந்தரங்க கருத்தை பத்திரிகை மகாநாட்டில் பரிமாறுவாரென்று நம்பியவருக்கு இது ஏமாற்றம்.

1983 ஆடிக்கலவரத்தில் ஆட்சியாளருக்குத் தேவைப்பட்ட ஆயுத உதவி 1971ல் மிக அவசியமான அவ்வித தேவையைப் போன்றது.

நாட்டின் இறைமைக்கு ஒரு அச்சுறுத்தல் என்பதால் இந்தியா போன்ற அயல்நாடுகள். நட்பு நாடுகள் 1971ல் நடந்த குழப்பத்தை அடக்க உதவின. 1983 கலவரத்தை அடக்க முடியாது திண்டாடிய அரசு பாகிஸ்தானை மட்டுமல்ல இந்தியா தவிர்ந்த பல கீழ் மேல்] நாடுகளை உதவி கோரி தேடித்திரிந்தது இன்றைய நிகழ்ச்சி.

முந்தியது சிறிமாவின் ஆட்சிக்கெதிரானது. பயங்கரச் செயல்களில் ஈடுபட்ட போதும், தமது இளைஞரை சிறிமா அம்மையார் ஆயுதப்போரை கைவிடும்படி பரிந்து மன்றாடினார், அது கைகூடாத அளவில் ஆயுத உதவி கோரி இருந்தார். ஆபத்துக்குதவியநாடு அயல் நாடான இந்தியா. தமிழர் பிரச்னை ஆயுதப் போரில் உருவெடுப்பதை முளையில் கிள்ள எடுத்த முயற்சியே 1983 ஆடிமாதக் கலவரம். அது எவ்வாறு எழுந்தது. எவ்வகையில் செயற்பட்டது. அதன் விளைவு என்ன என்பது இன்று உலகறிந்த விடயம்.

இந்தியாவின் உதவிதமிழ் மக்களுக்கு சாதகமாகுமென்ற கரவால் அதுதவிர்க்கப்பட்டது. அன்றைய பிரதமர் இந்திரா இவ்வித அரசியல் கரவை பிட்டுக் காட்டுவதில் சாமர்த்தியம் படைத்தவர். தமதுஅமைச்சர்களை நிலைமை அறிய நேரில் அனுப்பிய வீராங்கனை.

ஜனாதிபதியையும் ஏனைய தலைவர்களையும் சந்தித்ததோடு களத்தில் இறங்கி, கொலைக்குப் பலியான பரிதாபக் காட்சிகளை அன்றைய இந்திய பாதுகாப்பு அமைச்சராக இருந்த நரசிம்மராவ் நேரில் பார்வையிடவைத்தவர் இந்திரா. அதுமட்டுமல்ல, இக்கொலைகள் உடனடியாக நிற்பாட்டப்படவேண்டுமெனக்குரல் கொடுத்தார். இந்தியா இலங்கையின் நண்பரென்பதால் வேண்டிய உதவிகளை நாடுவோம் என்று அதனை விரும்பாத இலங்கையில் அவற்றை திணிப்பதில் வெற்றி கண்டார்.

'சிதம்பரம்' என்ற கப்பலில் யாழ்ப்பாணம் வந்த தமிழ் அகதிகள் இந்தியாவின் அன்றைய உதவியின் ஆழ நீளம் நேரில் அறிந்தவர்கள்.

எனவே அயல்நாட்டுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் எத்தகையது; அது உள் நாட்டுப் போரா, அல்லது வெளிநாட்டின் தாக்குதலா என்ற தாற்பரியம் தெளிந்த நிலையில் தகுந்த உதவி அயல் நாடுகள் வழங்கத் தயங்கா.

அயல்நாடு என்ற ஒருமை பாகிஸ்தானை மட்டும் குறிப்பிடுவதானால் அது அண்டை நாடாகியஇந்தியாவுக்கு எதிரானதென்ற சர்ச்சை எந்தக் குழந்தைக்கும் விளங்கும்.

திறமைசாலி, அனுபவசாலி என்று ஜனாதிபதி ஸியாவை நாம் குறிப்பிட்டிருந்தோம். அது முற்றும் உண்மை, இலங்கை நிலைமையை இதுகாறும் சமாளித்துவரும் ஜனாதிபதி ஜே. ஆரைப் போன்று ஸியா அவர்களும் உள் நாட்டில் 'மாஷெல்லோ', அண்டை நாட்டுடன் அணுகுண்டுப் பிரச்னை அதற்கு மேலாக, ஆப்கான் யுத்தம் போன்ற தலைபுழுத்த தொல்லைகளைத் தமது பரந்த தோள்களில் தனியேதாங்கிச் சுமக்கிறார்.

எனவே தமது ஆப்தநண்பன் ஜே. ஆரின் காதுக்குள் விட்ட ear drops பத்திரிகை மாநாட்டில் பரகசியமாகுமா?

அமெரிக்க போர்க்கப்பல் வந்துபோனது. ஐயோ! திருகோணமலை பறிபோயிற்று என்று கலங்குவதா?

மணியோசைக்குப் பின் யானை வருகிறது என்று ஜனாதிபதி ஸியாவின்வருகை வர்ணிக்கப்பட்டது. நாட்டின் நண்பன் நல்லதையே செய்வாரென்றோம். அது தவறென யார் நிரூபிக்க முடியும்? நிச்சயம் பத்திரிகை நிருபர்கள் அல்ல.

ஐயா ஸியாவிற்குளங்கள் விண்ணப்பம்: தாங்கள்இந்தியாவிற்குத்தொடரும் பயணம் வெற்றியளிக்கட்டும்.

இந்திய - பாகிஸ்தான் நட்பு நேர் சீரானதும், இலங்கை இறைமை மட்டுமல்ல தெற்காசிய பிராந்திய சச்சரவுகள் அனைத்தும் சண்டைக்கு இடமளியா.

கிளிநொச்சி

# 'ஜெயபுரம்' அகதிகள் குடியேற்ற திட்டம் -- ஒரு நோக்கு

1983 ஜூலைக் கலவரத்தைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான மலையகத் தமிழ் மக்கள் அகதிகளாக வடக்கு, கிழக்கு நோக்கி வந்தார்கள். பல்வேறு முகாம்களில் தஞ்சமடைந்தார்கள். இவர்களில் பெரும் பகுதியினர் மீண்டும் மலையகத்துக்கே திரும்பி சென்றுவிட்டனர். இவ்வாறு இவர்கள் திரும்பி செல்வதற்கு அகதி முகாம்களில் ஏற்பட்ட சிலபல சூழ்நிலைகளே காரணம்.

அகதிகளாக வந்த மலையக மக்களில் எஞ்சியவர்கள் ஒரு பகுதி இவர்கள் வெவ்வேறான பல இடங்களில் குடியேற்றப்பட்டுள்ளார்கள். அரசு சார்பற்ற பொது ஸ்தாபனங்கள் அரசின் உதவியுடன் இந்த குடியேற்றங்களை செய்து வருகின்றன.

இந்தக் குடியேற்றங்களில் ஒன்றுதான் ''ஜெயபுரம்'' என்னும் கிராமம். இக்கிராமத்தில் மொத்தமாக 149 குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்களுக்கென 149 தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டுள்ள அதே வேளை இரண்டு நிரந்தர வீடுகளுக்கு அத்திவாரம் போடப்பட்டுள்ளது. இதுவரை 112 கிணறுகள் வெட்டப்பட்டு 62 கிணறுகள் முழுதாக கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இக்கிராம மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் நான்கு கடைகளும் கட்டப்படவுள்ளன. மாணவர்களின் நலன் கருதி பள்ளிக்கூடம் ஒன்றும் அங்கு அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது இந்தக் கிராமத்தின் அமைப்பு வேலைகளை யாழ். கத்தோலிக்க திருச்சபையின் ''சமூகப் பணியாற்றும் மனித முன்னேற்ற நடுநிலையம்'' செய்து வருகின்றது. இந்த அமைப்பின் இயக்குநர் பங்குத்தந்தை வண - பயஸ் அவர்களாகும்.

காலத்துக்கு காலம் தமிழ் மக்களுக்கு இன்னல்கள் நேரிடும் போதெல்லாம் கத்தோலிக்கத் திருச்சபைகள் ஆற்றி வந்துள்ள பணிகள் மகத்தானவை, அதில் பங்குதந்தை வணபிதா பயஸ் அவர்களின் சேவைகளும் ஆக்கப் பூர்வமான திட்டங்களும் மறக்க முடியாதவை பிதாவின் சமூகப் பணிக்கு கிளிநொச்சி பொன்னகர் அமைதிப்புரம் ஆகிய கிராமங்கள சான்று பகரும்.

இன்னல் பட்டத் தமிழ் மக்களின் இடர்களைத் தீர்க்க பணியாற்றிவரும் பிதா பயஸ் அவர்களின் வழிக்காட்டலில் ஜெயபுரம் முழுமையான குடியேற்றத்திட்டமாக ஆகும் என்பது மாத்திரம் உண்மை.

— கே. வி. கே. திருலோகமூர்த்தி

## பிள்ளையார் கதை



விநாயக சஷ்டி விரதம் அநுட்டித்தவர்களான திருமால்-சிவன் அம்மை- வச்சிரமாலி, இலக்கணசுந்தரி ஆகிய அனைவரும் விரதகாலத்தில் பிள்ளையார் கதை கேட்பதை நியமமாகக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு விரதம் அநுட்டிக்கும் போது அவ்விரதம் அநுட்டிக்கும் நியமத்தை மட்டுமன்றி அவ்விரதத்தின் பெருமை- அதை அநுட்டித்து அருள் பெற்றவர்கள் வரலாறு- விரதத்தால் இறைவன் மகிழும் தன்மை போன்றவற்றையும் கேட்டறிதல் அவசியம்.

விரத காலங்களில் இறைவனது அருட் செயல்கள், வழிபாட்டு முறைகள், வழிபட்டுப் பயன் பெற்றவர் என்பவற்றைக் கேட்பது செவியால் வழிபடுதல் எனப்படும்.

செவிகாள் கேண்மின்களோ என்றுசெவியால்வழிபடுதலின் அவசியத்தை வலியுறுத்துவார் திருநாவுக்கரசர்.

திருவிழா- கும்பாபிஷேகம் என்பனவற்றை விமரிசையாகவும், கிரமமாகவும் செய்வோர் செவியால் வழிபடும் போதே தம்செயல் முழுமை அடையும்எனஉணரவேண்டும்

கேட்கத்தக்க நல்ல காதுகளைப் பெற்றிருப்பவர் நல்ல விடயங்களைக் கேட்கவில்லையானால் செவிட்டுக் காதுகளுடன் இருப்பதற்குச் சமம் என வள்ளுவர் 413 ம் குறளில் தெளிவுபடுத்துகிறார். காதுகளால் கேட்கத்தக்க நல்ல விடயங்களில் முதல் தரமானவை சிவகதை- தவக் கதைகளேயாகும்.

பிள்ளையார் கதை விரதம் அநுட்டிப்பது மட்டுமன்றிப் பிள்ளையார் கதையைக் கூறுவதும் கேட்பதும் பிள்ளையார் அருள்பெற உதவும். பிள்ளையார் கதை கூறுவதாலும் கேட்பதாலும் ஏற்படும் நலன்களை பொன்னுமிகும் கல்விமிகும் ...... முதலிய நாலுவெண்பாக்கள் அழகாகக் கூறுகின்றன.

—அருளாளன்.

[இன்று பிள்ளையார்கதை விரதத்தின் நிறைவுநாள்]

## நடந்தாலும் நின்றாலும் உந்தன் நினைவே!

ராகம்:- ஹம்சத்வனி தாளம்:-ஆதி

பல்லவி

சோதனைகள் தீராதோ வேழமுகனே— உன்தன்
சாதனைகள் இதுதானோ ஆனைமுகனே— என்தன்
[சோத......]

அனுபல்லவி

நம்பிடும் அடியேனின் நிலையிதுவோ—உன்னை
நம்புவார் தமைக்காக்கும் கலையிதுவோ—ஐயா!
—(சோத......)

சரணம்

நடந்தாலும் நின்றாலும் உன்தன் நினைவே!
துயின்றாலும் பயின்றாலும் உன்தன் கனவே!!
இணைந்தாலும் பிரிந்தாலும் உந்தன் துணையே!
இருந்தாலும் மாறாதாம் என்தன் நிலையே!!
[சோத......]

—''முருகு''

# அலென் ஆபிரகாம் ஞாபகம்

அலென் ஆபிரகாம் அம்பலவாணர் அவர்களைப்பற்றி ஓர் அரிய கட்டுரையை பொருத்தமான நேரத்தில் வெளியிட்ட திரு து. விஸ்வநாதன் அவர்கள் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர். அம்பலவாணர் ஞாபகத்தை நிலைநாட்டுவதற்கு திரு, விஸ்வநாதன் கூறியிருப்பவற்றிக்கு மேல் சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

## மக்கள் கருத்து

1. தமிழ் தெரியாதவர்களும் அறியும் பொருட்டு இக்கட்டுரையை ஆங்கிலத்திலும் எழுதி டெய்லிநியூஸ் போன்ற பத்திரிகைகளில் படத்துடன் வெளிவரச் செய்தல்.

2. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அவருடைம படத்தை வைத்தல். அங்கு இப்பொழுது சில பெரியார்களின் படங்களுண்டு.

3. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அவர் பெயரால் ஒரு புலமைப் பரிசில் (Scholarship or Prize) ஏற்படுத்தல். இதற்கு மக்கள் தாராளமாக பணம் வழங்குவார்கள்.

4. அவருடைய ஆங்கிலக் கட்டுரைகளைத் தொகுத்து 1986ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு முன் வெளியிடுதல். இக்கைங்கரியத்தை யாழ்ப்பாணக் கல்லூரி செய்யலாம்.

மேற் கூறியவற்றை காரை நகரில் ஏற்படுத்தப்பட்ட ஞாபகார்த்த சபை செய்யலாம்.

இவர் ஞாபகத்தைப் பரந்த முறையில் கொண்டாடுவது நலம். கொழும்புத் தமிழ் சங்கத்தோடு தொடர்பு கொண்டால்அவர்கள் இவ்விஷயத்தில் தீவிரமாக ஈடுபவார்கள்.

ச. அம்பிகைபாகன்.
மல்லாகம்.

## நத்தார் வாழ்த்து

[யாழ்ப்பாணம்]

வழமைபோல் அழகான அட்டையும் படங்களும் கொண்ட நத்தார் வாழ்த்து என்ற தலைப்பில் சிறுவர் பாடல் நூல் ஒன்றினை கவிஞர் பி. சத்தியசீலன் வெளியிட்டுள்ளார்.

நத்தார் பரிசு வழங்க விரும்புபவர்கள் குழந்தைகளுக்கு இந்நூலையும் ஏனையவற்றுடன் சேர்த்து வழங்கலாம்.

## புலமைப் பரிசில்

[வவனியா]

வவனியா கச்சேரி திட்டமிடல் பிரிவு உயர் பதவி வகிக்கும் உயர்அதிகாரிஒருவர்வெளிநாடு செல்வதற்குப் புலமைப் பரிசில் பெறுவார் என ஊகிக்கப்படுகிறது.

இந்த அதிகாரி பற்றிய விபரங்களைத் திட்டமிடல் அமைச்சு ஏற்கனவே பெற்றுள்ளதைத்தொடர்ந்து இவ் வூகம் வெளிப்பட்டுள்ளது.

## யோகபுரத்தில் மட்பாண்டத் தொழிற்சாலை

[யோகபுரம்]

யோகபுரம் கிராமோதய சபை அடுத்த நிதியாண்டில் இப்பகுதியிலுள்ள மண் வளத்தைப்பயன் படுத்தி சட்டிபானை, மற்றும் விளையாட்டுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கும், இப்பகுதியில் மின் தறி நெசவாலையை ஆரம்பித்து இப்பகுதி இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சபைத் தலைவர் திரு. கு. சிவஞானசண்முகம் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

**உஷாமினி**
10-30, 2-30, 4-45, 6-45
AMMERICAN WARRIOR
தனி ஒரு அமெரிகக இராணுவவீரனது துணிகரமான மோதல்கள், ஹெலிகாப்டரையே தகர்த்து எறியும் புதிய நவீன துப்பாக்கி.

**எம்பயர்**
7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30
ரஜனி-ராதிகா
**ரங்கா**

**லிடோ சினிமா**
10-30, 2-30, 4-30, 6-30
**தனி மரம்**
13 முதல்
**JAWS-III**

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30
சிவகுமார்-பிரமிளா நடித்த
பாலச்சந்தரின்
**அரங்கேற்றம்**
17-ந் திகதி முதல்
TEN BROTHERS OF SHAOLIN TEMPLE
(Latest Karate)

## அவசர.,.

(1 ம் பக்சத் தொடர்ச்சி)

சபாவில் பேசுகையில் அவர் கோரிக்கை விடுத்தார்.

''பாகிஸ்தானிலிருந்து துருப்புக்களை அழைப்பதன் நோக்கம், இலங்கையிலுள்ள தமிழர்களைப் பூண்டோடு அழிப்பதற்கேயாகும்'' என்றும் அவர் அச்சம் தெரிவித்தார்.

### வெளியுறவு அமைச்சர் பகத் கருத்து

''இலங்கையில் நடைபெறும் வன்முறைகளுக்கு முடிவை ஏற்படுத்த... வென்றைக் கொண்டு வந்து அங்குள்ள தமிழ் மக்களின் அபிலாசைகளைப்பூர்த்தி செய்யும் வகையில் இலங்கையின் இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தைமூலம் தீர்வொன்றைக் கொண்டுவர வேண்டுமென்பதே இந்திய அரசின் தொடர்ச்சியான நடவடிக்கையாக இருக்கும்'' என்று இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பி. ஆர். பகத் தமது அமைச்சுடன் அமைந்த பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கருத்து தெரிவித்தார்.

இலங்கையில் தினமும் நடைபெற்றுவரும் வன்செயல்கள் பற்றி இந்த உறுப்பினர்கள் கவலை தெரிவித்த பொழுதே திரு. பகத் மேற்படிகருத்தை வெளியிட்டார்.

இலங்கை இனப்பிரச்னைக்கு இராணுவத்தீர்வு ஒன்று காண முடியாது என்பதனை இந்தியா மீண்டும் மீண்டும் தெரிவித்து வருவதையும் அவர் சுட்டிக் காட்டினர். [து]

## வீடியோ படத்தகவல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களின் மொத்தத்தொகை1900 இவர்கள் யாவரும் தமிழர்களே-

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் காலப்பகுதியான கடந்த ஆறுமாத காலத்தில் (18-6.85முதல் 15-12-85வரை) இடம்பெற்றுள்ள வன்செயல்களின் தொகை 2006 ஆகும். இவற்றின் விபரங்கள்: கொலைகள்: 378, இதில்பொதுமக்கள் 296 பேர், பொலிஸார் 36 பேர், இராணுவத்தினர் 35 பேர், சடற்படையினர் 11 பேர்,கடத்தல்கள்: 360. இதில் மிகச்சிலரே விடுவிக்சப்பட்டுள்ளனர். பணக்கொள்ளைகள் 127 வாகனக் கொள்ளைகள் 356. மோட்டார்சைக்கிள், சைக்கிள் கொள்ளைகள்: 182, ஏனைய கொள்ளைகள்: 449. ஏனைய சம்பவங்கள்: 254'' என்றார்.

### தளபதி கருத்து

கூட்டு ஆயுதப்படைகளின் தளபதி மேஜர் சிறில் ரணதுங்கா இம்மாநாட்டில் கருத்து தெரிவிக்கையில்; ''தமிழ்மக்களும் சிங்கள மக்களும் எமது நாட்டு மக்களாகும். எமது மக்களுக்கு எதிராக நாம் போர் நடத்தவில்லை. தீவிரவாதிகளோடு தான் போர் நடத்துகிறோம். வெளிநாட்டவர்கள் எமதுநாட்டுக்கு வந்து சென்று பொய்களையும் கட்டுக்கதைகளையும் அவிழ்த்து விடுகின்றனர். இது எதற்காக என்பது எனக்கு விளங்கவில்லை எமது நாட்டு மக்களை பாதுகாப்பது எமது கடமை. நாட்டில் தீவிரவாதிகள் எங்குமே அகதிமுகாம் நடத்தவில்லை மாவட்ட அரசாங்க அதிபரும், இணைப்பு அதிகாரி ஆகியோரின் பொறுப்பிலேயே அகதி முகாம்கள் உள்ளன. ஆங்காங்கே உள்ள அகதிகளை முக்கிய நகரங்களில் ஒருங்கிணைத்து செயல்பட்டுவருகின்றோம். அகதி முகாம்களை நாங்கள் எங்கும் தாக்கவில்லை இம் முகாம்களில் தீவிரவாதிகள் தங்கியிருந்தாலும் நாங்கள் அகதிமுகாம்களுக்கு போகவில்லை ஏனெனில் அகதி முகாம்களில் உள்ள பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள், முதியோர்கள் சாதாரண பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிக்க ...ண்டிய... உள்

ளது.'' என்று விளக்கினர்.

### வீடியோ படம்

நேற்று நடைபெற்ற இந்தச் செய்தியாளர் மாநாட்டில் பிரிட்டிஷ் தொலைக்காட்சி நிறுவனத்தால் ஒளிபரப்பப்பட்ட ''குழப்பம் நிறைந்த சுவர்க்க பூமி'' என்னும் வீடியோபடம் செய்தியாளர்களுக்குப் போட்டுக்காண்பிக்கப்பட்டது. இந்த வீடியோ படம் சுமார் 25 நிமிடங்கள் ஓடியது. இப்படத்தில் அன்ரன் பாலசிங்கம், விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன், திருகோணமலை விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர் திரு. சந்தோஷன், அகதி முகாம் உதவியாளர் திரு. சுந்தரம், ஓய்வுபெற்ற சிவில் சேவை அதிகாரி இராம. சிவகுரு ஆகியோர் அகதி முகாமில் தங்கியுள்ள ஆண், பெண் ஆகியோரின் பேட்டிகளும், அகதி முகாம் ஒன்றும், ஹெலிகொப்டர் ஒன்றும், தீவிரவாதிகளின் செயல்திட்டங்கள் முதலியனவும் இடம்பெற்றிருந்தன. [இ-அ]

## பாதுகாப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர். எனவே இலங்கை அரசின் போர்நிறுத்தத்தைக் கண்காணிக்க செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச நிறுவனம் ஒன்றினை நாம் கோருகின்றோம்.

''எமது தாயகத்தை மீட்கும் பணியில் நாம் ஈடுபட்டிருப்பதால் மக்களின் முழுமையான ஆதரவு எமக்குண்டு. தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளின் விடுதலைக்காகச் செயற்படும் எம்மை 'விடுதலை வீரர்'களாகவே தமிழ் மக்கள் கணிக்கின்றனர். சுதந்திர தமிழீழம் அமைக்க முடியும். இதுவே எமது முடிவான தீர்வாகும்''. (இ-அ)

## கண்காணிப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குழு இதற்கான ஒழுங்கைச் செய்திருந்தது. வண. பிதா பீற்றர் குருகுலசூரியா, டாக்டர் வீ. ஆர். பெர்னாண்டோ உட்பட சமய நிறுவனங்களும், பொது ஸ்தாபனங்களும் சாட்சியமளித்தன. (அ)

## தாம்போதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சு)

அரசாங்க அதிபர்கள்: திரு. எஸ். பி. பாலசிங்கம், திரு. கே. கோபாலரட்ணம், பிரதிப் பணிப்பாளர்கள்: பொறியியலாளர்கள், மகாதேவா தாம்போதி வேலைக்குப் பொறுப்பாக இருந்த திரு. இராமகிருஷ்ணன் ஆகியோரும், பூநகரி மக்களும் கலந்து கொண்டனர்.

யாழ், அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில் பலருடைய முயற்சியினல் கடந்த நாலு வருடங்களாக இவ்வேலை நடைபெற்றுப்பூர்த்தியாகியுள்ளதாகவும் பூநகரி மக்களும் பொது ஸ்தாபனங்களும்பூரண ஒத்துழைப்பு வழங்கியதாகவும் தாம்போதி திறந்துவைக்கப்படுவதாகவும் கூறினர்.

மகாதேவா பாலத்துக்கு ஆரம்பத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தங்குமடத்தில் பாலம் அமைப்பதற்குச் சிரமதானமூலம் வேலைகள் செய்த 40 பொது ஸ்தாபனங்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-மா)

## துப்பாக்கி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கோட்டைக்கல்லாறில் பலியான மூவரின் சடலங்கள் கல்முனை ஆஸ்பத்திரியிலும், வந்தாறுமூலையில் பலியான ஒருவரின் சடலம் ஏருவூர் ஆஸ்பத்திரியிலும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (மா)

நியூ விக்ரேஸ்
**புதிய வீடியோ படவெளியீடுகள்**

1. கற்பூரதீபம் (தொம்சன்-ஒறிஜினல்) ★ சிவகுமார் ★ அம்பிகா
2. ராஜரிஷி (தொம்சன்-ஒறிஜினல்) ★ சிவாஜி
3. எங்கள் குரல் (தொம்சன்-ஒறிஜினல்) ★ அர்ஜூன் ★ நளினி

**நியூ விக்ரேஸ்**
எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23532

வீடியோ பிரசாத்தின்
**புதிய வெளியீடுகள்**

1. கற்பூரதீபம் (Thomson Original)
2. எங்க குரல் (Thomson Original)
3. ராஜரிஷி (Master Print-Pyramid)
4. DIRTY DOZEN 2ND MISSION (War Film)

இன்னும் பல புதிய ஆங்கில வெளியீடுகளும்.
எமது புதிய விலாசம்:
**வீடியோ பிரசாத்,**
232, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

மேலைக்கரம்பன் அருள்மிகு முருகமூர்த்தி கோவிலில் நிகழும் மார்கழி மாதம் முதலாம் திகதி (16-12-85) தொடக்கம் முருகப்பெருமானின் திருவருளால் புதுஅர்ச்சகர் நியமனம் பெற்றுள்ளபடியால், இனி வருங்காலங்களில் வழமைபோல் கோவிலில் நடைபெற்றுவந்த திருவிழாக்கள், பூசைகள் எல்லாம் தவறாது நிகழ்வதற்குத் திருவருள் பாலித்துள்ளது. மேற்படி கோவில் திருவிழாக்கள் பூசைகளின் உபயக்காரர்களும், அன்பர்களும் மேல் விபரங்களுக்கு கோவில் ஆதீனகர்த்தாவுடன் நேரிலோ அல்லது கடித மூலமோ தொடர்புகொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

சோ. பாலக்கிருஷ்ணன்
மேலைக்கரம்பன் முருகமூர்த்திகோவில்,
ஊர்காவற்றுறை. (2429)

## கடைசி நேர வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

இல: 570103350 V பொன்னுச்சாமி சுந்தரலிங்கம் (பலாலி) என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். பொ. சந்திரலிங்கம், பலாலி கிழக்கு, வசாவிளான். (2432)

## மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம்

### சாக்கு விற்பனை

மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கத்தில் வெற்றுச்சாக்குகள் 4509 உம் வெற்றுப்பைகள் 270 உம் விற்பனைக்கு உண்டு. சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப் பத்திரத்தை ரூபா 200/- முற்பணம் செலுத்திப் பூரணப்படுத்தி 23-12-85 பி.ப 12 மணிக்கு முன் கிடைக்ககூடியதாக அரக்கு முத்திரையிடப்பட்ட பதிவுத்தபால் மூலம் பொதுமுகாமையாளர், மானிப்பாய் கோவில்பற்று ப. நோ.கூ. சங்கம், மானிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பொதுமுகாமையாளர்.
16-12-85. (2431)

## 31-வது நாள் நினைவஞ்சலி

### திருமதி அன்னஜானகி சின்னத்துரை

(ஊறணி-வல்வெட்டித்துறை)

19-11-85 அன்று இறைபதம் எய்திய திருமதி அன்னஜானகி சின்னத்துரையின் அந்தியேட்டிக்கிரியைகள் 19-12-85 வியாழனன்று காலை 7 மணியளவில் நடைபெறும். அன்னாரது அந்தியேட்டிக்கிரியைகளிலும் அடுத்து நடைபெறும் வீட்டுக் கிருத்தியங்களிலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களையும் வேண்டுகின்றோம்.

19-11-85-ல் நடைபெற்ற அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் பலவிதத்திலும் உதவிபுரிந்த அன்பர்கள் எல்லோருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

செப்பாடு, பொலிகண்டி
வல்வெட்டித்துறை. 2434

## மரண அறிவித்தல்

### திருமதி Dr. பத்மினி மாணிக்கரட்ணம்

அரியாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற [ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்] முத்தையா சோமசுந்தரம் திருமதி பாரதி சோமசுந்தரம் [ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்] ஆகியோரின் அன்பு மகளுமான Dr.பத்மினி மாணிக்கரட்ணம் லண்டனில் அகால மரணமானர். அன்னர் ஸ்ரீதரன், திருமதி ஸ்ரீசாமினி நந்தவன், ஸ்ரீகம்ணசன், ஸ்ரீகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னரின் இறுதிச் சடங்குகள் லண்டனில் 17-12-85 [இன்று] செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது. உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி பா. சோமசுந்தரம்,
இல. 6, அருளம்பலம் லேன்,
அரியாலை, யாழ்ப்பாணம்.
[2428]

## மலேயன் பென்சனர் சூட்டுக்குப் பலி!

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் நடந்த மலேயன் பென்சனியர்களின் கூட்டத்திற்குச் சென்ற எண்பது வயது வயோதிபர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

மானிப்பாயைச் சேர்ந்த மலேயன் பென்சனியர் கந்தையா துரைசாமி (80 வயது) என்பவரின் மரணவிசாரணையில் மேற்கண்ட தகவல் தெரிய வந்தது.

யாழ். பதில் நீதவான் ஏ. அன்ரனி நேற்று மரண விசாரணை நடத்தினார்.

இறந்தவரின் மருமகள் எஸ். பசுபதி சாட்சியமளிக்கையில் சம்பவ தினம் காலை 10 மணிக்கு இறந்தவர் வீட்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் நடந்த பென்சனியர் கூட்டத்திற்குச் சென்றார் என்றும் பிற்பகல், ஒருவர் வந்து 'யாழ்நகரில் பென்சனியர் ஒருவரைச் சுட்டு விட்டார்கள்' என்று கூறினாரென்றும். தான் யாழ். ஆஸ்பத்திரிக்குச் சென்றுபொலிஸாரைக் கேட்டபோது மாமன் துரைசாமி என்பவர் சுடப்பட்டதாக அறிந்து சடலத்தை அடையாளம் காட்டியதாகவும் கூறினார்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட பதில் நீதவான் விசாரணையை ஒத்திவைத்தார். [சு]

## ராணுவத்துக்கு கணவன்பலி: அதிர்ச்சியில்மனைவிஇறந்தார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி 6-ம் வாய்க்காலில் நடைபெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து இராணுவத் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியான மனோகரராசவின் மனைவியும் கணவன் பலியான துயர் தாங்காது மாரடைப்பால் மிகவும் பரிதாபகரமாக மரணமானார்.

கடந்த 13-ம் திகதி இரவு நடைபெற்ற நெஞ்சை உருக்கும் இச் சோக சம்பவம் கணேசபுரம் பகுதியை சோகத்தில் ஆழ்த்தி உள்ளது.

இம்மரணத்துடன் ஒரே வீட்டில் வசித்து வந்த மூவர் மரணத்தை அணைத்துக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மகேந்திரராசாவும் அவரது வயலில் வேலைசெய்து கொண்டிருந்த இராசரெத்தினமும் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகியுள்ளது தெரிந்ததே.

கணவனின் சடலம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்ட சிலமணிநேரத்துள் மனோகரராசாவின் மனைவி செல்வராணி (33 வயது) மரணமானார்.

## ரூபவாஹினி

மாலை

5-00 செய்திகள்
5-05 காட்டூன்
5-30 'கறுப்புக்குதிரை' அங்கம் - 6
6-00 விளையாட்டுப் பயிற்சி
6-15 இளைஞர் ஆண்டு
6-30 செய்திகள் (தமிழ்)
6-55 பட இசையமைப்பாளர் அறிமுக நிகழ்ச்சி
7-25 தற்ஸ் இன்கிறிடிபிள் அங்கம் - 8
8-00 செய்திகள் (சிங்களம்)
8-20 தட்ஸ் இன்கிறிடிபிள் தொடர்ச்சி.
8-40 'சித்சரா'
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-20 காதல்டடகு (ஆங்கிலம்) அங்கம் - 9
10-10 தசலிவன்ஸ் அங்கம் - 33
11-00 ஒளிபரப்பு முடிவு

## மாணவர் அதிகரிப்பு ஆசிரியர் பற்றுக்குறை

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையில் மாணவர்களின் தொகை அதிகரித்ததைத் தொடர்ந்து, ஆசிரியர் பற்றுக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஜனவரி தொடக்கம் இவ்வித்தியாசாலையில் புதிய ஆண்டு 7ம் வகுப்பும் ஆரம்பிக்க கல்வித் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளதாக வித்தியாலய அதிபர் திரு சு. லோகதாசன் தெரிவிக்கிறார் வித்தியசாலைக்கான மின்சாரம், குடிநீர் போன்ற வசதிகளை பழைய மாணவர்கள் தங்கள் செலவில் செய்து கொடுக்க முன்வந்துள்ளது. குறிப்பிடத்தக்கது. அத்துடன் வித்தியாசாலைக் கட்டிடம் விஸ்தரிப்பதற்கு கல்வித் திணைக்களம் நிதியும் ஒதுக்கியுள்ளது.

420 பிள்ளைகளுக்கு மேல் கல்வியிலும் இவ் வித்தியாசாலையில் 8 ஆசிரியர்களே இப்பொழுது கடமையாற்றுவதாகவும் மேலும் மூன்று ஆசிரியர்களைத் தந்துதவுமாறும் வித்தியாசாலை அதிபர், கல்வித் திணைக்களத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். [மா]

## இன்று கணபதி ஹோமம்

கந்தர்மடத்தில் விளங்கும் பழம்வீதி, பிள்ளையார் தன்னை வழிபடும் அடியார்களின் விருப்பங்களை விரைவில் சித்தியடையச் செய்த சிறப்பால் சித்திவிநாயகர் என்ற பெயருடன் விளங்குகின்றார். இவ் விநாயகப் பெருமானை வணங்கி அருள்பெற்ற அடியார்கள் விநாயக சஷ்டி காலங்களில் இலட்சார்ச்சனை, ஹோமம் முதலிய வழிபாடுகள் செய்து தமது விநாயகபக்தியைவெளிப்படுத்துகின்றார்கள்.

உலகில் வாழும் பண்பாடு நிறைந்த மக்கள் மட்டுமன்றி தேவர்களும், முனிவர்களும் அசுரர்களும் கூட விநாயகவழிபாட்டால் நலன்பல அடைந்திருக்கின்றனர்.

விநாயக சஷ்டி விரதத்தின் போதும் பிற விசேட நாட்களிலும் விநாயகப் பெருமானைக் குறித்து அபிஷேகம், பூசை, நிவேதனம், ஹோமம் முதலியனசெய்தல் சிறுவர்களை மகிழ்வித்தல். முனிவர்கள்,குருமார் பெரியோர்களை மதித்தல் ஆகியசருமங்களால் விநாயகப் பெருமானை மகிழ்வித்தல் சான்றோரின் இயல்பாகும்.

(கந்தர்மடம் பழம் வீதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் கடந்தமாதம் 26ம்திகதி ஆரம்பமான லக்ஷார்ச்சனை இன்று நிறைவு பெறுகின்றது.)

## இன்றைய பலன்

மாதம்- மார்கழி
திகதி- 2(1985-12-17)
கிழமை- செவ்வாய்
திதி- ஷஷ்டி மு இ வரை
நக்ஷத்திரம்- அவிட்டம் மு,ப வரை

மேடம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும். அரச பயத்திற்கும் இடமுண்டு. சகோதர சுகக் குறைவும் உண்டாம்.

இடபம்: உறவுகள் பலப்படும். உள்ளத்தில் உவகை துள்ளும். உயர்வுக்கும் வழி பிறக்கும்.

மிதுனம்: நல்ல காரியங்களை ஆரம்பிப்பதற்கு இன்று சுப நாள். தொழில் புரியும் இடத்தில் பாராட்டுதலும் கிடைக்கும்.

கடகம்: பகைவர்கள் பதுங்குவர். பாதையில் தடைகளுமுண்டு. நம்பிக்கைமோசடி மூலம் பணமும் பறிபோகலாம்.

சிங்கம்: இல்லத்தில் இனிமை தவழும். வெளியிடத்தில் தொடர்புகள் பெருகும். இனசனங்களின் உதவியுடன் செல்வாக்கும் பெருகும்.

கன்னி: வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம் அவசரப் போக்கினால் ஆபத்துக்கள் விளையும். சகோதர வழியாலும் சஞ்சலமுண்டு.

துலாம்: ஒளிமயமான தினம். ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். உங்கள் உற்சாகத்தில் பெற்றோரும் துணைநிற்பர்.

விருச்சிகம்: செய்தொழிலால் சிறப்புண்டு. புதிய கண்டுபிடிப்புக்களும் இடம் பெறும். பொறியியலாளர்களுக்குச் சிறந்த தினம்.

தனுசு: மற்றவர்களின் இன்னல் கண்டு இரக்கம் காட்டுவீர்கள். தாராள குணத்தின்மூலம் தனமும் செல்வாக்கும் யாத்திரையுமுண்டு.

மகரம்: இன்று எதிலும் நிச்சயமற்ற நிலை தென்படும். மனதிலும் விரக்தியும் தோன்றும். அடக்கம் நன்று.

கும்பம்: முன்னேற்றம் தடைப்படும். குறுக்கு வழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம். உடல் நலமும் பாதிக்கப்படும்.

மீனம்: இல்லத்தில் திருப்திகரமான நிலை தென்படும். அந்தஸ்திலும் உயர்வுண்டு. பொருள் வரவுக்கும் இடமுண்டாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## கிளிநொச்சி
## ராணுவ விஸ்தரிப்புக்குள் யோககசுவாமி சிரமம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பொலிஸ் இராணுவ முகாம் விஸ்தரிப்பு வேலை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

''பொலிஸ் நிலையம் முன்பாக உள்ள பட்டின சபை, நூலகக் கட்டிடங்கள், யோக சுவாமி ஆச்சிரமம், தீர்ப்பாசனத் திணைக்கள விடுதிகள் முதலியன இந்த விஸ்தரிப்புக்குள் அடங்கும்.

## இந்திய ஸ்தானிகராலயம் மறுப்பு

(கொழும்பு)

இந்தியப்பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியைப் பாதுகாக்க இஸ்ரேலியர் ஆலோசனை பெறப்பட்டது என உள்ளூர்ப்பத்திரிகைகளில் வெளிவந்துள்ள செய்தியை இலங்கையிலுள்ள இந்திய ஸ்தானீகராலயம் மறுத்துள்ளது.

கடந்த வாரம் இலங்கை பத்திரிகைகளில் வெளிவந்திருந்த இச்செய்தி சென்னை 'இந்து' பத்திரிகை செய்தியை ஒன்றை அடிப்படையாகக் கொண்டே வெளியிடப்பட்டுள்ளதாகவும், ஆதாரமற்ற இச்செய்திகளை திட்டவட்டமாக மறுப்பதாகவும் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

## சபாஷ் சிதம்பரநாதன்

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியிலிருந்து க. பொ. த. (உயர்) தரப்பரீட்சைக்குத் தோற்றி நான்கு பாடங்களிலும் 'ஏ' தரத்தில் சித்தியடைந்த மாணவன் செல்வன் வைரமுத்து சிதம்பரநாதனை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் பாராட்டி கௌரவிக்கவுள்ளது.

இம் மாணவனுக்கு 1000 ரூபா ரொக்கப் பரிசும் ஜேர்மனியிலிருந்து பெறப்பட்ட 'கோட்' ஒன்றும் அன்பளிக்கப்படுமென்று சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார்.

## வறுமையில் பாரதிபுரம்

[கிளிநொச்சி]

ஒன்றும் அறியாத அப்பாவிகளான எமது பிள்ளைகளையும் கணவன்மாரையும் ஆயுதப் படையினர் கைதுசெய்து கொண்டு போய்விட்டனர். மலையகத்தில் இருந்து பல்வேறு துன்பங்களை அனுபவித்துக் கிளிநொச்சிக்கு வந்தோம் இங்கும் எமக்கு உயிர்வாழும் நம்பிக்கைஇல்லை'' என்று கிளிநொச்சி பாரதிபுரத்திற்கு விஜயம் மேற்கொண்ட கிளிநொச்சிப் பிரஜைகள் குழுவினரிடம் பாரதிபுர மக்கள் முறைப்பாடு செய்தார்கள்.

இவர்களது குறைகளைக் கண்டறியவும் ஆயுதப்படையினரால் கைதாகி விடுவிக்கப் படாதிருக்கும் 14 இளைஞர்களின் நிலவரங்களை அறியவும் பிரஜைகள் குழுவின் சார்பில் செயலாளர் சட்டத்தரணி ரி. ஸ்ரீஸ்கந்தராசா, உபதலைவர் டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி, பொருளாளர் ரி. எஸ். தர்மசிங்கம் ஆகியோர் பாரதிபுரம் சென்றிருந்தனர். இம்மக்கள் வறுமையால் வாடுகின்றனர்.

## ஆரம்ப சுகாதார நிலையம்

(பண்டத்தரிப்பு)

சங்கானை மேற்கு ஆரம்ப சுகாதார நிலையத்தின் முதலாவது ஆண்டு நிறைவுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் பண்ணாகம் மாதர்கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது

நிலையத்தலைவர் சட்டத்தரணி பொ. சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சங்கானை சுகாதாரப்பரிசோதகர் எஸ். ஜோன், வைத்திய கலாநிதி செ.வைத்திலிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றுவார்கள்.


## நத்தார் பண்டிகையை முன்னிட்டு

கேக் தயாரிப்புக்கு தேவையான இறக்குமதி செய்யப்பட்ட:

* சுல்தானா [Plums]
* றேசன்ஸ்
* கரனஸ்
* ஈச்சம்பழம் [Dates]

ஆகிய பொருட்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்
இன்றே விஜயம் செய்யுங்கள்:

**பெற்ரு எசன்ஸ் சப்ளையர்ஸ்**
**223, மின்சாரநிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**



## தொழில்நுட்ப பயிற்சிகள் மீண்டும் ஆரம்பம்

பின்வரும் பாடநெறிகளுக்கான பயிற்சி 3 - 1 - 86 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

வீட்டு மின் இணைப்பு (Electrical House Wiring)
கடைச்சல் யந்திர இயக்குநர் (Lathe Operator)
மின் ஒட்டு வேலை (Arc Welding)
} 3 மாத காலப் பயிற்சி

மட்டுப்படுத்தப்பட்ட அளவு மாணவரே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பதிவாளர்
REGISTRAR
**PATRICIAN INSTITUTE**
OF HIGHER STUDIES
59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
## அறிவித்தல்

நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தில் கீழ் குறிப்பிடும் பொருட்கள் கேள்விகோரிக்கை அடிப்படையில் விற்பனைக்கு உண்டு. விண்ணப்பிக்க விரும்புவோர் மீள அளிக்கப்படும் கட்டுப்பணமாக ரூபா 500/- செலுத்தியிருப்பதுடன் இதற்காக சங்கத்தின் விண்ணப்பப்படிவத்தை ரூபா 5/- செலுத்திப் பெற்று 25-12-85 அன்றோ அதற்கு முன்போ கீழ் குறிக்கப்படும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. இசுசு லொறி கழிக்சப்பட்ட உதிரிப்பாசங்கள்.
2. இசுசு லொறி கழிக்சப்பட்ட ரயர் ரியூப் வகைகள்
3. இசுசு லொறி கழிக்சப்பட்ட உடற் கோப்பு ஒன்று
4. வெற்று பரல்கள்
5. வெற்றுச் சாக்கு 7000
6. பழைய நல்ல நிலையில் ஓடுகள் 2500.

**பொதுமுகாமையாளர்**
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.
2425

---

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வட்டுக்கோட்டை மேற்கு இராமலிங்சம் கைம்பெண் தங்கம்மாவின் மரண சாதனம் சம்பந்தப்பட்ட விடயத்தில்.
— மரணமெய்தியவர்,

தவராஜா சண்முசராசா வட்டுக்கோட்டை மேற்கு அவரின் அற்றேனித்தத் துவகாரன் திருச்செல்வம் விஞயகரட்ணம். வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை.
— மனுதார்,

வழ. இல. ரி/3886

எதிராக
1. நவராஜா பத்மராஜா
2. நவராஜா யோகராசா
3. நவராஜா இளையராசா
4. சுப்பிரமணியம் பத்மநாதன்
5. பெண் பத்மலீலா

எல்லோரும் வட்டுக்கோட்டைமேற்கு, வட்டுக்கோட்டை.
— பிரதிவாதிகள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு இந்நீதிமன்றத்தில் மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக இந்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு மார்கழி மாதம் 20ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளை ஆக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 8ந் திகதி.

நீதிமன்றக் சட்டளைப்படி,
**கனகேந்திரன்,**
பதிவாளருக்காக,

வரைந்தவர்:
**ச. அபிமன்னசிங்கம்,**
மனுதாரின் சட்டத்தரணி.
(2424)

---

# இப்படியும் நடக்கிறது

தொலைபேசி வழக்கம்போல அழைத்ததும், ஸ்ரீமான் பொதுஜனம்... ''ஓ.........ஹி.........'' என்று சிரியாய் சிரித்தார்!

''என்ன...... உங்கட சிரிப்பு நகைப்புக்கிடமாக இருக்கிறதே...'' என்றேன்.

''...ஓ... அதுசரி, உங்களுக்குப் புரியாதுதான்...'' என்று அவர்; ''கிளியைப் பத்திரமாகப் பாதுகாப்பேன் என்று. கூறி 'பாலும் பழமும்' ஊட்டி நன்றாக வளர்த்து பூனைக்கு கொடுத்த கதையைச் சரி கேள்விப்பட்டிருக்கிறீர்களா...?'' என்று கேட்டார்.

சுவிஸ் அதிகாரிகள் கடைசியாகக் கூறியிருக்கும் 'குட்டிக் கதை'யின் நினைவு வந்தது. உங்களுக்குப் புரிகிறதா?

**''ஊடுருவி''**

---

## வங்கியில் நகை அடகு வைத்தோர்: அவசரக் கோரிக்கை

[ஐ.சண்முகலிங்கம்]

வங்கிகளில் அடகு நகைகளை மீட்பதற்கு வாடிக்கையாளர்கள் வங்கிகளுக்குப் பணம் செலுத்தவேண்டாம் என்று அடகு வைத்தோர் சங்கம் அடகு வைத்தவர்களை வேண்டுகின்றது.

தற்போது நடைமுறையில் உள்ள நகை விநியோக முறை, அடகு வைத்து இதுவரை பணம் செலுத்தாத வாடிக்கையாளர்களை மேலும் பணம் செலுத்தத் தூண்டும் ஓர் நடவடிக்கையாக இருப்பதாலேயே இவ்வாறு பணம் செலுத்த வேண்டாமென்று அடகுவைத்தோர் சங்கம் வேண்டுகோளை விடுத்துள்ளது.

தற்போதுள்ள விநியோக முறையின்கீழ் பணம் செலுத்தியவர்களுக்கு அவர்களுடைய முழு நகைகளையும் கொடுத்து முடிக்க வங்கிக்கு மூன்றரை வருடங்கள் செல்லும். மேலும் இதே ரீதியில் அடகுவைத்த முழு வாடிக்கையாளர்களது நகைகளையும் கொடுத்து முடிக்க இருபத்தைந்து வருடங்கள் எடுக்கும் என்றும் மேற்படி சங்கம் தெரிவிக்கிறது.

அடகுவைத்தோர் சங்கம் நேற்று திங்கட்கிழமை நடத்த இருந்த மறியல் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்புக்குழு இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்குத் தமக்குக் கால அவகாசம் தரும்படி கேட்டுள்ளதும், கண்காணிப்புக்குழு உறுப்பினர் பேராசிரியர் கா. சிவத்தம்பி இது விஷயமாக பாதுகாப்பு அமைச்சுடனும், கண்காணிப்புக் குழுவுடனும் தொடர்பு கொண்டிருப்பதாலுமே மறியல் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாம்.

---

## கண் நோய்!

[நெடுந்தீவு]

நெடுந்தீவு கிழக்கு, மத்திய பகுதிகளில் கண்நோய் பரவலாகப் பரவியுள்ளது.

இந்நோயாளர் பலர் பாதிப்படைந்தபோதிலும், நெடுந்தீவு வைத்தியசாலையில் கண்நோய்ச் சிகிச்சைக்கான மருந்துகள் கைவசம் இல்லையென்று கூறப்படுகிறது.

---

## ''யாழ். தொகுதியில் மட்டுமே பாடசாலைக்குப் பிள்ளைகள் செல்வது குறைவு''
### கல்விப்பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பத்துத் தொகுதிகளிலும் யாழ்ப்பாணத் தொகுதியிலேயே பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வது குறைவாக உள்ளது. பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதில் பெற்றோர் கவனமெடுக்க வேண்டும். கல்வி மூலமே எம் சமூகம் உயர்வடையும்.

யாழ். கொழும்புத்துறை றோமன் கத்தோலிக்க ஆண்கள் வித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலை திறப்பு விழா, பெயர்மாற்றம், ஓய்வு உபசாரம் ஆகிய நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. சிமியாம்பிள்ளை இவ்வாறு கூறினர்.

மேற்படி வித்தியாலய அதிபர் தலைமையில் இவ்விழாக்கள் நடைபெற்றன.

'சென் ஜேசப்ஸ் வித்தியாலயம் என இவ்வித்தியாலயம் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. யாழ். கல்வித்திணைக்கள கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி புதிய பெயரைத் திரை நீக்கம் செய்துவைத்தார்.

இவ் வித்தியாலயத்துக்கான புதிய மாடிக் கட்டிடத்தைக் கல்விப் பணிப்பாளர் திறந்து வைத்தார். திருமதி ஜெயமணி சிமியாம்பிள்ளையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக யாழ். அ. சபை உதவிச் செயலாளர் திரு, எஸ். பரமானந்தன் கலந்து கொண்டார்.

பதினைந்து வருடங்களாக இவ்வித்தியாலயத்தில் ஆசிரியையாகக் கடமை புரிந்த திருமதி ஏ. ஜி, இம்மானுவேலுக்கு ஓய்வுபசார விழா கொண்டாடப்பட்டது.

பிற்பகல் ஒளிவிழா நடைபெற்றது. [ஐ]

---

## தனியார் மருத்துவக்கல்லூரி: வாதமும் பிரதிவாதமும்!
### அமைப்பாளர் கலந்துகொள்ளவில்லை

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை தனியார் மருத்துவக் கல்லூரி அமைப்பது சம்பந்தமாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில்; சில சீர்திருத்தங்களின் அடிப்படையில் இக்கல்லூரியை இயங்க அனுமதிக்கலாம் என்றும், இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் இவ்வாறான கல்லூரியை இயங்க அனுமதிப்பது தவறு என்றும் அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டன.

''எமது நாட்டின் விடுதலைக்கும், சோஷலிஸநோக்கிற்கும் தனியார் மருத்துவக் கல்லூரி எந்தவகையிலும் பொருந்தாது'' என்று ஈழமாணவர் பொதுமன்றத்தின் பிரதிநிதி ஒருவர் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் பொதுஅறையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் கூறினர்.

தேசிய மாணவர் மன்றம் ஒழுங்கு செய்திருந்த இக்கருத்தரங்கில் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு சாதகமாகவும், பாதகமாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

யாழ். மருத்துவபீட மாணவர்கள் கருத்து தெரிவிக்கையில், ''இதன் அமைப்பாளர்கள் தமிழ் மாணவர்களின் நன்மை கருதியே இதனை ஒழுங்கு செய்திருந்தாலும், நடைமுறைச் சாத்தியத்தில் பலசிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது'' என்றும் ''விரிவுரையாளர்கள் பற்றுக் குறையாகவுள்ள நிலையில், விரிவுரையாளர்கள் இங்கு வந்து கடமையாற்றுவார்களா என்பதுகேள்விக்குறியே. வைத்தியசாலைக்கே நிபுணர்கள் பற்றுக்குறையான இன்றைய காலகட்டத்தில் இங்கு பயிற்சியளிக்க எங்கிருந்து பெறப்படும்? இன அடிப்படையில், மாவட்ட அடிப்படையில் தரப்படுத்தல் இடம்பெறுவது போல் இங்கு தகுதி அடிப்படை மறைந்து பணஅடிப்படையே தலைதூக்கும். தகுதி அடிப்படையில் இதனைச் செயற்படுத்துவதே சிறப்பாக அமையும்'' என்றும் கூறினர்.

''எமது அழைப்பை ஏற்று தனியார் மருத்துவக் கல்லூரி அமைப்பாளர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தங்கள் யோசனைகளை முன்வைத்திருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும்'' என்றும் கருத்து வெளியிடப்பட்டது. [பி]

---

## வாழ்வாங்கு வாழ்ந்த அம்மையார்

பத்து மைலளவுக்கு நாத ஒலியைப் பரப்பி நிற்கும் திருக்கேதீச்சர அசையா மணி மூலம் முதலியார் ச. குமாரசாமி குடும்பத்தினரின் இறைபணியை யான் 1964 ஆம் ஆண்டளவில் அறியமுடிந்தது. பின்னர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வள்ளியம்மை மண்டபம் எனும் மாடிக் கட்டிடத்தைப் பார்த்தபோது அவர்களது பாரிய கல்வித் தொண்டினையும் உணரக் கிடைத்தது. இக் கட்டிடம் முதலியாரின் காலத்தில் நிறுவப்பட்டது. அசையா மணியோ 1955 ஆம் ஆண்டு முதலியார் அவர்கள் மறைந்த பின்னர் அவரது துணைவியார் அவர்களின் சிவதொண்டாக அமையப்பெற்றது.



இவைபோன்ற எண்ணற்ற இறைபணிகளையும், பொது உதவிகளையும் வற்றாது வழங்கிய அம்மையாரே திருமதி ச. குமாரசாமி வள்ளியம்மை அவர்களாவர். இவர்கள் ''சாணு-கூனு அம்மா'', என எல்லோரது நெஞ்சத்திலும் இடம்பெற்றிருந்தார். சிவப்பொலிவே இவரது தோற்றம். தமது எண்பதைத் தாண்டிய வயதிலும்கூட அதிகாலை துயிலெழுந்து, திருநீறணிந்து, தாம்பூலம் தரித்த திருவுருவாகவே இவர் காணப்படுவார். அன்பான உபசரிப்பும், இன்சொல்லும் சிறியரில் இருந்து முதியோர் வரை அவரவர்க்குரிய அறிவுரை பகரும் தன்மையும் அவரின் அணிகலன்களாகும்.

அருகாமையில் அமைந்துள்ள சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் சிவாலயத்தின் மகத்தான இராசகோபுர வேலை உட்பட பல திருப்பணிகள் அம்மையார் அவர்களின் திருத்தொண்டென அறிகிறோம், சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் கோவில் திருப்பணிகளும் பல. இரு கோவில்களின் அழகிய பூந்தோட்டங்களும் இவரால் மேலும் அணி செய்யப்பட்டன. தீர்த்தத் திருவிழா உட்பட பல விழாக்கள் இக்குடும்பத்தினரால் நேர்த்தியாக நடாத்தப்பெறுகின்றன. அம்மையாரின் தாய்வழிக் கிராமம் ''தையிட்டி'' ஆகும். அங்கும் திருப்பணிவேலைகள் தவறியதில்லை. அங்கு அம்மையாரின் உதவிபெற்ற பொது நிறுவனங்களும், மாதர் சங்கங்களும் இவர்களது சமூக சேவைக்குச் சான்றாகும்,

இவர்கள் வதிந்து புகழ் பூத்த பூமியாகிய பட்டக்களப்பில் பரந்து நின்ற தென்னந்தோட்டங்களும் செந்நெல் வயல்களும் செழித்து நின்று இவர்களது சேவைக்கு உதவின. அங்கு ஆனைப்பந்தி பிள்ளையார் கோவில் உட்பட பல திருப்பணிகளும், பொதுப்பணிகளும் இடம்பெற்றன.

சித்தன்கேணிச் சந்தியில் சில கடை வரிசைகள் தெரிகின்றன அல்லவா? தமது திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற அம்மையாரவர்கள் விட்டுச் சென்றுள்ள கட்டிடங்களே இவை. அம்மையார் 19.12-37 இலிருந்து 18-11-85 வரை ஆயிரம் பிறை கண்ட மூதாட்டி வாழ்வாங்கு வாழ்ந்த செம்மனச்செல்வி. அன்னாரின் ஆன்மா எம்பிரான் திருவடி நீழலின் சந்நிதி பெறவேண்டி வணங்குகிறோம். அன்னாரின் குடும்பத்தினர்க்கு எம் அன்பு உரித்தாகுக.

**ஓர் அன்பன்.**

---

## தேநீர் விருந்துபசாரம்

[சுழிபுரம்]

வைத்திய சேவையே மிக மிக உயர்ந்த சேவையாகும். மருத்துவ அறிவும் மருந்து வகைகளும் நிறைந்திருந்தாலும் வைத்தியரின் கைராசியும் வைத்திய சேவைக்கு இன்றியமையாதது. வைத்தியர்களாகப் பல பேர் கற்று வெளியேறுகின்றனர். இவர்களில் ஒரு சிலாறு கைராசி சிறப்பாக அமைவதால் இவர்களிடம் நோயாளர்கள் திரள்கின்றனர். இளம் தலைமுறையினரின் அன்பராக விளங்கும் வைத்தியர் த. சந்திரசேகர் கைராசிக்காரராகவும் மிளிர வாழ்த்துவோம்.

இவ்வாறு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை நிர்வாகசபைச் செயலாளர் திரு. சோ. க. வேலாயுதர் பண்ணாகம் கல்வி, கலை, கலாசார ஒன்றியம் நடாத்திய தேநீர் விருந்து வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். வைத்தியர் த. சந்திரசேகர் வைத்திய பரீட்சையில் சித்தியடைந்தமைக்காக இத்தேநீர் விருந்து வைபவம் நடைபெற்றது திருவாளர்கள் சி தியாகராசா, மா. கிருஷ்ணர், ப. இராசகுரு, க. வாவதேவன், த. துரைலிங்கம், இ. தப்பையா க. பேரின்பநாதன், செல்வி. இரா. இராசமலர் உட்படமற்றும் பலர் பாராட்டுரை வழங்கினர். பண்ணாகம் ஆண்கள் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் செல்வி. ஆ. கலாவல்லி தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## வவனியா அரச அதிபர் மீண்டும் பதவியில்

[வவனியா]

வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. லோகேஸ்வரன் ஒரு மாத இடைவெளிக்குப் பின்னர் வவனியா செயலகம்வந்து நேற்று மீண்டும் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

வவனியாவிலுள்ள அவரது இல்லத்தில் இரு தடவை கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றது தெரிந்ததே. (மா)

## தேடுதல் நடவடிக்கை முடுக்கிவிடப்படுகிறது

(வவனியா)

வடபகுதியில் தேடுதல் நடவடிக்கைகளை முடுக்கிவிடும் நோக்கமாகப் பெருந்தொகையான இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கவசவாகனங்களிலும் ட்ரக்குகளிலும் லொறிகளிலும் அநுராதபுரத்திலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர், மதவாச்சி, வவனியாப்பகுதியை அடைந்ததும் நடைபவனியாகத் தமது பிரயாணத்தை மேற்கொண்டுள்ளனராம்.

இராணுவத்தினர் வந்து கொண்டிருக்கும் வீதிகள், பாலங்கள், மதகுகள் நன்கு சோதனை செய்யப்பட்ட பின்னரே பிரயாணம் தொடரப்படுகிறது.

வவனியாப்பகுதி பிரதான வீதியால் நேற்று வாகனப் போக்குவரத்து, இராணுவத்தினர் எல்லையைக் கடக்கும் வரை தடைப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. (மா)

### மரண அறிவித்தல்

### திருமதி சிதம்பரேஸ்வரி கனகரத்தினம்

காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவி சிதம்பரேஸ்வரி காலமாகிவிட்டார். இவர் சிவசுப்பிரமணியம் (M. C. Office Colombo), பரமேஸ்வரி (பின்லாந்து), இலங்கைநாதன் (கிளிநொச்சி), புலேந்திரன் (றியோமில்,ஏருவூர்), கதிர்காமநாதன் (டென்மார்க்), விஜலட்சுமி, கனகசிங்கம் (நில அளவையாளர் முருங்கன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவலிங்கம் (பின்லாந்து), சிவதாசன் (Irrigatian Office Kilinochchi), மனோரஞ்சிதம், தவமலர் (டென்மார்க்), பாக்கியலட்சுமி ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் செவ்வாய்கிழமை (17-12-85) காலை 10-00 மணியளவில் இணுவில் பூவோடை மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலைஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சிவசுப்பிரமணியம்
இணுவில் கிழக்கு,
சுன்னுகம்.

[2438]

### மரண அறிவித்தல்

### சிற்றம்பலம் செல்லத்துரை

புங்குடுதிவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பு - யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகரும், கொழும்பு, யாழ்ப்பாணம் எஸ். ஏ. செல்லையா அன் கொம்பனியின் முன்னுள் பிரதான பங்காளரும்; யாழ்ப்பாணம் ஈஸ்வரி றேடேர்ஸ் உரிமையாளருமான சிற்றம்பலம் செல்லத்துரை அவர்கள் காலமானுர். இவர், புங்குடுதீவு மேற்கு காலஞ்சென்ற வேலாயுதம் சிற்றம்பலம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும்; திருமதி நகுலஸ்வரியின் அன்புக் கணவரும்; காலஞ்சென்ற வர்த்தகர் அப்டையா, திருமதி சி. சிவக்கொழுந்து, திருமதி த. நாகம்மா, மற்றும் திருமதி பொ. மீனுட்சி, யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர் சி. பர்லசிங்கம் ஆகியோரது அன்புச் சகோதரரும், குமாரமூர்த்தி (U.K ), இலட்சுமணன் (உரிமையாளர், ராணி ஜுவல்லர்ஸ், யாழ்ப்பாணம்), திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம், புலேந்திரன் (வீனஸ் என்ரர்பிறைஸ்,கொழும்பு),ஸ்ரீகாந்தா (U K.), செல்வராணி ஆகியோரது அன்புத் தந்தையும்: அ.குணபாலசிங்கம் (பிரதேச முகாமையளர், நீர் விநியோக வடிகால் அமைப்புச் சபை, யாழ்ப்பாணம்), திருமதி சாந்தினி லட்சுமணன் ஆகியோரின் அன்பு மாமனுரும்; ஷர்மிளா, விஜயசங்கர், கோபிநாத், வித்யா, கஜனுத், கோகுலன் ஆகியோரின் அன்புப் பேரனும்: இரத்தின கோபால் (அதிபர், கடுகண்ணுவை தமிழ் வித்தியா சாலை), இராஜேந்திரன் (மேற்கு ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னுரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக யாழ். நல்லூர் குறுக்குத் தெரு, 90ம் இலக்க அவரது இல்லத்திலிருந்து இன்று (17-12-85) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணிக்குச் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (2439)

### ஊர்காவல்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற விசாரணையின் பின்னர் ஊர்காவல்படையைச் சேர்ந்த சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மீதிப்பேர் தலைமறைவாகி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பகுதி மக்களை ஊர்காவல் படையினர் அச்சுறுத்தி வருவது குறித்து இணைப்பதிகாரிக்கும், உதவி அரசாங்க அதிபருக்கும் பல தடவைகள் முறையிடப்பட்டிடது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையின் பின்னரே ஊர்காவல் படையைச் சேர்ந்த சிலர் கைது செய்யப்பட்டனர். (மா)

## இந்திய - ஆஸி. கிரிக்கெட் டெஸ்ட்

(அடிலேட்ஸ்)

இந்திய - அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிகளுக்கிடையே அடிலேட்ஸில் நடைபெறும் முதலாவது கிரிக்கெட் டெஸ்டின் 4-வது நாள் ஆட்ட முடிவில் இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களை இழந்து 391 ஓட்டங்களை பெற்றது.

நேற்றைய ஆட்ட முடிவில் சுனில் மனோகர் கவாஸ்கர் 94 ஓட்டங்களுடனும், றேயர் பின்னி 34 ஓட்டங்களுடனும் ஆடிக்கொண்டிருந்தனர்.

நேற்றைய ஆட்டத்தில் அசாருதீன்-17, மொகிந்தர் அமர்நாத்-37, ரவி சாஸ்திரி -42, கப்பில்தேவ்-38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் மொத்தம் 381 ஓட்டங்களை எடுத்தது. இந்த டெஸ்ட் போட்டி வெற்றி-தோல்வியின்றி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## குண்டடிபட்டு இருவர் மரணம்!

[யாழ்ப்பாணம்]

குண்டடிபட்டு மரணமான தமது இரு தோழர்களுக்குஅஞ்சலி செலுத்தி (புரட்சிகர ஈழ விடுதலைக் கழகம்' 'ரெலோ) கவிதை நடையில் பிரசுரம் ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளது.

கீரிமலையைச் சேர்ந்த சி. சிவலிங்கம் (ஜெயா) 18 வயது, செ. நவரத்தினம் (ரதன்) 16 வயது ஆகிய இருவருமே பலியானவர்களாவர்.

'கனத்த இதயங்களுடன்..' என்ற தலைப்பில் இப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. (மா)

## பலாத்கார வழக்கு நாளை விசாரணை

[யாழ்ப்பாணம்]

மந்துவில் பலாத்கார வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். ஆனந்த குமாரசாமி முன்னிலையில் நேற்று எடுக்கப்பட்டு நாளை வரை ஒத்தி போடப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் மந்துவிலில் 75 ஆகஸ்ட் 31 ம் தேதி ஒரு இளம் பெண்ணை பலாத்காரம் செய்ததாக வி. கந்தசாமி, ந இராசையா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அரச தரப்பில் அரச சட்டத்தரணி ஏ. ஞானதாசன் ஆஜரானுர். [க]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram, Eelanadu, Telephone: 22389-24126.

### ஜி. ஸி. ஈ. பரீட்சை விடைத்தாள்

## யாழ்ப்பாணத்தில் திருத்தப்படுமா!

(யாழ்ப்பாணம்)

ஜி. ஸி. ஈ. (சாதாரணதரம்) பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் வேலைகள் இம்முறை யாழ்ப்பாணத்திலும் நடைபெறலாம் எனத் தெரிகிறது.

ஜி. ஸி. ஈ. சாதாரணதரப் பரீட்சை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இம்முறை மிகவும் அமைதியாக நடைபெற்றதால் இப்பரீட்சையின் விடைத்தாள்களின் திருத்தவேலைகளை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளலாம் என்று ஆலோசிக்கப்படுவதாகத் தெரிகிறது,

விடைத்தாள்கள் திருத்தும் வேலைகளை இம்மாத இறுதி வாரத்தில் ஆரம்பிக்கப் படலாம் என்றும் தெரிகிறது. [ஐ]

## கரோல் ஆராதனை

[உடுவில்]

உடுவில் தெற்கு சத்தியபுரம் சிற்றுலய 'கரோல்' ஆராதனை இம்மாதம் 21,22,23ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

### மரண அறிவித்தல்

### நடராசா மாணிக்கநடராசா

(கொக்குவில்)

ந. மாணிக்கநடராசா [இளைப்பாறிய C. A. S. அலுவலகர்] அவர்கள் காலமாகிவிட்டார். அன்னுர் காலஞ்சென்ற ஜெகசோதியின் அன்புக் கணவரும், கமலமனோஹரி [சிரேஷ்ட உதவி நிதியாளர் - யாழ். பல்கலைக்கழகம்], ஜெயமனோஹர் [கனடா], மகாநந்தன் [ஹட்டன் நஷனல் வங்கி, கண்டி], ஸ்ரீதரன் [A. I. T., பாங்கொக்], கருணுஹரன் [நெஸ்லேஸ் யாழ்ப்பாணம்], ஜெகன்மோகன் (சீ-நோர், யாழ்ப்பாணம்], கௌரிமனோஹரி, ரமாமனோஹரி [யாழ். வளாகம்], சுந்தரமோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞா. யுசேந்திரன் [பொது முகாமையாளர் சீ-நோர்], ராஜி [கனடா], சிவாஜினி [திருத்துவக் கல்லூரி, கண்டி] பிரியாந்தி [பாங்கொக்], பாலகுமார் [fபெயர்லைன் காமென்ற்ஸ், கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமனுரும், பவளம்மா, காலஞ்சென்ற நடராசாவின் மகனும், ஞானசம்பந்தன், ஞானசுந்தரம், கருணுதேவி சிவகுருநாதனின் அன்புச்சகோதரனும், சந்திரவதனியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னுரது ஈமக்கிரியைகள் நாளை 18 ம் திகதி புதன்கிழமை காலை 10-30 மணியளவில் அன்னுரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

81, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில் (சந்தி).

[2442]

### மரண அறிவித்தல்

### திரு. வேலாயுதர் Samuel நாகலிங்கம்

(இளைப்பாறிய யாழ். மாநகரசபை வரியிறுப்பாளர்)

இவர் காலஞ்சென்ற திருமதி பரஞ்சோதி நாகலிங்கத்தின் [இளைப்பாறிய ஆசிரியை, பரமேஸ்வராக் கல்லூரி] அன்புக் கணவரும், திருமதி யோகமணி நேசமணிக்கம், திரு. N. தேவபாலசிங்கம் [Retd. Lecturer Teacher's College, Palaly], திரு. N. தேவபாலன் [முன்னுள் யாழ். மநகரசபை உறுப்பினர் [Retd. Sports Officer], காலஞ்சென்ற திருமதி தேவமணி இராமநாதன், திரு. N. பூபாலசிங்கம் [Insurance Manager, John keels, Colombo] ஆகியோரின் அருமைத் தகப்பனுரும், S. G. N. புஸ்பரத்தினம் [S L. B, C.] திருமதி புஸ்பராணி புலேந்திரன், திரு புஸ்பநாயகம் [Redd Barna, Colombo], திருமதி புஸ்பநாயகி மேதர் [Methodist College, Colombo], திருமதி புஸ்பரஞ்சிதம் [Docky] ரட்ணதிலக [Colombo University] செல்வி தேவமலர் [St. Patricks, Talawakella], திருமதி தேவசுசந்தி விபூஷணு ]Redd Barna, புதுக்குடியிருப்பு]. செல்வி தேவசீலி, தேவானந்தன், தேவநேசன் [St. John's College, Jaffna], டானியல் ஜெடநேசன், செல்வி லிலானி [Ladies College, Colombo], திருமதி புஸ்பராணி புஸ்பரத்தினம் [Walker Sons, Colombo], திரு. புலேந்திரன், திருமதி செல்வராணி புஸ்பராயசம் [S.L.B C ] திரு. மனோ மேதர் [தொழிலதிபர் Colombo], திரு ரட்ணதிலக [Galle Campus], திரு. R. Roy விபூஷணு, திருமதி சசிகலா டானியல் ஆகியோரின் அன்புப் பேரனும். பிரதீப், ரமேஷ், வாணி தீபா, சுமங்கலி, விரேந்திரன், லோகான், டன்னல் நிக்கோலா, மனோஜா, ரொமேஷ், அனோஜன், அனித்தா ஆகியோரின் அருமைப் பூட்டனுரும், காலஞ்சென்ற G. B. D. நேசமாணிக்கம், திரு. இராமநாதன், திருமதி அன்னபூரணம், திருமதி இராஜமணி [ஆசிரியை விக்னேஸ்வர வித்தியாலயம், கைதடி], திருமதி இந்திராணி [இளைப்பாறிய ஆசிரியை, Ladies College, Colombo] ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னுரின் நல்லடக்கம் கொட்டடி கிறிஸ்தவ பொதுச் சவக்காலையில் 18-12-85 புதன்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். அவரது அடக்க ஆராதனை அன்று காலை 9 மணிக்கு அன்னுரது திருநெல்வேலி பல்கலைக்கழக வீதி இல்லத்தில் நடைபெறும்.

[2443]